பக்கங்கள்: பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 19 செவ்வாய்க்கிழமை (03-07-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:219

## யாழ்ப்பாணத்தில் புலிகளின் நிலைகள் மீதான
# குண்டு வீச்சுத் தொடர்ந்தால்
# சமாதான முயற்சிகள் குழம்பும்!

## விடுதலைப் புலிகள் அரசுக்கு எச்சரிக்கை

வவுனியா,ஜூலை3

**யாழ்ப்பாணத்தில் புலிகளின் நிலைகள் மீதான விமானக் குண்டுவீச்சு மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் என்பன அவற்றின் தற்போதைய தீவிரத் தன்மையில் தொடர்ந்தால், அது சமாதான முயற்சிகளில் சீர்செய்ய முடியாத பாதிப்பை ஏற்படுத்தும்.**

**- இவ்வாறு ஸ்ரீலங்கா அரசை எச்சரித்திருக்கின்றது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு.**

இது தொடர்பாக வன்னியில் விடுதலைப் புலிகளின் தலைமையகம் ஓர் அறிக்கையை வெளியிட்டதாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

விமானத் தாக்குதல்களை இந்த அறிக்கையில் விமர்சித்த புலிகள், அவை ஆத்திரமூட்டும் ஆக்கிரமிப்பாகவும் திட்டமிடப்பட்ட திசைதிரும்பல்களாகவும் உள்ளன என்று தெரிவித்துள்ளனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை நிலைமை குறித்து இந்தியத் தரப்பு ஏமாற்றம்

புதுடில்லி,ஜூலை3

இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து ஏமாற்றம் அடைந்துள்ளோம். எனவே பேச்சை மீண்டும் ஆரம்பிக்கத் தேவையான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் வேண்டிக்கொள்வதுடன் இவ்விடயத்தில் தீவிரமாகவும் செயற்படுகிறோம்.

- இந்திய மத்திய அரசின் குரல் தரவல்ல அதிகாரி ஒருவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை நிலைவரம் குறித்து அவர் கருத்து வெளியிடுகையில் மேலும் கூறியதாவது:-

இலங்கை நிலைமையின் போக்குக் குறித்து இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருகின்றது. எமது நாட்டின் கருத்துக்களையும் இலங்கைக்குத் தெரிவித்து வருகின்றோம்.

தற்போதுள்ள நிலைமை குறித்து ஏமாற்றம் அடைந்துள்ளோம். சமாதானத்துக்கு மாற்றீடாக எதுவும் இல்லை எனத் தெரிவித்துள்ளோம். சமாதானத்துக்கான செயல்முறைகளுக்கு புத்துயிர் ஊட்டுவதற்கு ஊக்கம் அளித்து வருகிறோம் - என்றார் அவர். (உ-3)

## அவசரகால நீடிப்பை எதிர்த்து ஐ.தே. கட்சி வாக்களிக்கும்

கொழும்பு,ஜூலை3

அவசரகாலச்சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணைக்கு எதிராக ஐ.தே.கட்சி வாக்களிக்கவிருக்கின்றது என்று அக்கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் தெரிவித்தார்.

இந்தப் பிரேரணை மீதான விவாதத்தின்போது கட்சியின் உறுப்பினர்களையும் சபைக்கு சமுகம் அளிக்க வைத்து பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கச் செய்யும் பொறுப்பை கட்சியின் தமிழ் எம்.பிக்கள் ஏற்றுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேபோல் தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் ரெலோ ஆகிய கட்சிகளின் தலைமையும் தமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையில் சமுகமளித்து பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கச் செய்யும் பொறுப்பை ஏற்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (உ-3)

## குடாக் கடலில் படகில் ஷெல் விழுந்து மீனவர் பலி

யாழ்ப்பாணம்,ஜூலை3

அரியாலை கடற் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி நேற்றுக் காலை 8 மணியளவில் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலினால் மீனவர் ஒருவர் பலியானார்; மூன்று பேர் காயமடைந்தனர்.

குருநகரில் இருந்து நேற்றுக் காலை 6 மணிக்கு மீன் பிடிப்பதற்காச் சென்ற மீனவர்கள் அரியாலை கடற்பிரசேத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். இந்த வேளையில் எங்கோ இருந்து வந்த ஷெல் ஒன்று நான்கு மீனவர்கள் இருந்த படகு ஒன்றின் நடுவே விழுந்து வெடித்தது. இந்தத் தாக்குதலினால் மீனவர்களில் படகு பிளந்ததுடன் படகில் இருந்த மீனவர்களில் ஒருவரான குருநர் தண்ணீர்த்தூங்கியடி

(14ஆம் பக்கம் பார்க்க)

## நாகர்கோயிலில் மோதல்

கொழும்பு,ஜூலை3

நாகர்கோயில் கரையை அண்மித்த கடற்பகுதியில், கடந்த சனிக்கிழமை இரவு படகொன்றில் வந்த விடுதலைப் புலிகள் கரையிலிருந்த இராணுவ நிலைகள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் -

(14ஆம் பக்கம் பார்க்க)

## சிப்பாய் பலி

கொழும்பு,ஜூலை3

எழுதுமட்டுவாழ் இராணுவ முகாமுக்குள் கடந்த சனிக்கிழமை இரவு 8.15 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார் என விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது. (உ-ஒ-3)

## ஆளும் தேசிய முன்னணியின் தலைவர்கள் தமிழ்நாடு அரசைக் கலைக்க வற்புறுத்து!

புதுடில்லி,ஜூலை3

கலைஞர் கருணாநிதி மற்றும் மத்திய அமைச்சர்களான முரசொலி மாறன், ரி.ஆர்.பாலு ஆகியோரை மிகவும் முரட்டுத்தனமாகக் கையாண்ட தமிழக மாநில அரசுக்கு எதிராக மத்திய அரசு மிகக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று ஆளும் தேசிய ஐக்கிய முன்னணி அரசின் தலைவர்கள் தீர்மானித்திருக்கின்றார்கள்.

சட்டத்தையும் ஒழுங்கையும் சீர்குலைத்துள்ள மாநில அரசை உடனடியாகப் பதவி நீக்க வேண்டும் என்றும் -

இச் செயல்களுக்குக் காரணமான பொலீஸ் மற்றும் சிவில் அதிகாரிகளுக்கு எதிராக மிகக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் -

தேசிய ஐக்கிய முன்னணித் தலைவர்கள் பலரும் வலியுறுத்தியிருக்கின்றார்கள்.

தமிழக நிலைமை குறித்து ஜோர்ஜ் பெர்ணாண்டஸ் தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணிக் கூட்டமைப்பின் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட விசேட பிரதிநிதிகள் குழு, சென்னைக்கு வந்து நேரடியாகப் பெற்ற தகவல்களின் அடிப்படையில் சமர்ப்பித்த அறிக்கையை, தேசிய ஐக்கிய முன்னணியின் தலை

(14ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக நிலைமைகள் குறித்து முடிவெடுப்பதற்கான
# மத்திய அமைச்சரவைக் கூட்டம் இன்று காலை வரை ஒத்திவைப்பு

புதுடில்லி,ஜூலை3

தமிழக முன்னாள் முதல்வர் மு. கருணாநிதி, மத்திய அமைச்சர்கள் முரசொலிமாறன், ரி.ஆர்.பாலு ஆகியோர் கைது செய்யப்பட்டதை அடுத்து தமிழகத்தில் எழுந்துள்ள நிலைமை குறித்து ஆராய்வதற்காக நேற்றுக் கூடும் என அறிவிக்கப்பட்ட அமைச்சரவையின் முக்கிய கூட்டம், இன்று காலை வரை ஒத்திவைக்கப்பட்டதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

அரசில் பிரதமர் வாஜ்பாய்க்கு அடுத்த நிலையில் இருக்கும் அத்வானி துருக்கி நாட்டுக்கு விஜயம் மேற்கொண்டிருக்கின்றார். மாநில அரசுகள் விடும் இத்தகைய தவறுகளைக் கையாள வேண்டியது அத்வானி வசம் உள்ள உள்துறை அமைச்சே ஆகும்.

அந்த அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சர் இல்லாமல் - அதுவும் அரசின் இரண்டாவது மூத்த தலைவர் சமுகம் தராத நிலையில்- முக்கிய முடிவு எடுப்பது பொருத்தமற்றது என்று கருதியே நேற்றைய அமைச்சரவைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

அமைச்சர் அத்வானி இன்று காலை நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்துக்கு முன்பதாக, தமது வெளிநாட்டு விஜயத்தை முடித்துக்கொண்டு புதுடில்லி திரும்பி

(14ஆம் பக்கம் பார்க்க)

## குற்றச்சாட்டுக்கள் விலக்கப்படும் வரை
# சிறையில் இருந்து விடுவிக்கப்படுவதற்கு முரசொலிமாறன், பாலு இருவரும் மறுப்பு

சென்னை,ஜூன்3

கலைஞர் மு.கருணாநிதியின் கைதைத் தொடர்ந்து கடந்த சனியன்று ஜெயலலிதா தலைமையிலான தமிழக மாநில அரசினால் கைது செய்யப்பட்ட மத்திய அமைச்சர்களான முரசொலிமாறன், ரி.ஆர். பாலு ஆகியோரை விளக்க மறியலில் இருந்து விடுவிப்பதற்கான உத்தரவை மாநில அரசு நேற்று நீதிமன்றத்தில் பெற்றுக்கொண்டது.

ஆனால் -

தங்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் விலக்கப்படும் வரை விடுவிப்பை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்று அந்த இரு அமைச்சர்களும் உறுதிபடத் தெரிவித்துவிட்டதாக செய்தி ஏஜென்ஸிகள் அறிவித்தன.

மத்திய அமைச்சர்கள் இருவரை மாநில அரசு கைது செய்ததால், மாநில அரசுக்கு எதிராக எழுந்துள்ள நெருக்கடி உச்சக்கட்டத்தை அடைந்திருக்கும் நிலையில் -

இரு மத்திய அமைச்சர்களையும் விடுவிக்கும் முயற்சியில் - முடிவில் - ஜெயலலிதா அரசு இறங்கியதாகக் கூறப்படுகின்றது.

அப்பலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கும் சமயத்தில், மருத்துவமனையிலேயே சிறைவைக்கப்பட்டிருக்கும் முரசொலிமாறனுக்கு எதிரான விளக்கமறியல் உத்தரவு இன்று வரையிலும் -

வேலூர்ச் சிறையில் விளக்க

(14ஆம் பக்கம் பார்க்க)

## பிணையில் வராமல் சிறையில் இருந்து வழக்குகளைச் சந்திக்க கலைஞர் உறுதி

சென்னை,ஜூலை3

பிணையில் வெளியே வராமல் சிறையில் இருந்தவாறே தமக்கு எதிரான வழக்குகளை எதிர்கொள்வது என்ற திடமான முடிவுக்கு தி.மு.க. தலைவரும் முன்னாள் தமிழக முதல்வருமான மு.கருணாநிதி வந்துவிட்டதாக அவரது சட்டத்தரணிகள் தெரிவித்திருக்கின்றனர்.

தமக்கு எதிராகச் சுமத்தப்பட்டவை அரசியல் உள்நோக்கமும் பழிவாங்கும் எண்ணமும் கொண்ட மாநில அரசின் பொய்க் குற்றச்சாட்டுக்கள் என்று கலைஞர் கருணாநிதி கூறுவதாகவும் -

சிறைக்காவலுக்குப் பயந்து - விளக்கமறியலில் இருந்து வெளியேறுவதற்காக - அவர் பிணை அனுமதி கோரமாட்டார் எனவும் -

அவரது சட்டத்தரணிகள் மேலும் தெரிவித்தனர்.

எனினும் -

கருணாநிதி கைது செய்யப்பட்ட கையோடு, அவரைப் பிணையில் விடுவிக்கக் கோரி அவரது சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு பெரும்பாலும் இன்று நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# பயணத்துக்கு பாதுகாப்பு முன் அனுமதி கோருவது அடிப்படை மனித உரிமை மீறல்!

## அமெரிக்கத் தூதரிடம் மகேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை3

யாழ்ப்பாணம் - கொழும்பு இடையே பயணம் செய்வதற்கு, பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறும் நடைமுறை, தமிழ் மக்களுக்கு எதிரான மிக மோசமான மனித உரிமை மீறல் என்று தெரிவித்து அதனைக் கவனத்தில் எடுக்கும்படி கோரி மகஜர் ஒன்றை ஐ.தே.கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் இலங்கைக்கான அமெரிக்கத் தூதரிடம் நேற்று நேரில் சந்தித்துக் கையளித்தார்.

அந்த மகஜரில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் - குறிப்பாகப் பாதுகாப்பு அமைச்சகத்தைச் சார்ந்தோரால் - நிகழ்த்தப்படும் மனித உரிமை மீறல் தொடர்பாக தங்களிடம் தெரிவிக்க விரும்புகிறேன்.

புதியதொரு ஆயிரமாம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ள நாம் ஜனநாயகம் பற்றிப் பெருமிதத்துடன் பேசுகின்றோம். ஆனால் இலங்கையில் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகள் மிகவும் மோசமாக மறுக்கப்படுகின்றன. சர்வதேசத்திற்கும் மிக நன்றாகத் தெரிந்த அந்த விடயம் குறித்து நான் விளக்கமாகக் கூறவேண்டியது அவசியமில்லை.

நாடு மிக இக்கட்டான சூழ்நிலையில் இருக்கும்போது, தமிழர்கள் மீதான மனித உரிமை மீறல்களைத் தங்களின் கவனத்துக்குக் கொண்டு வருவதற்காகவே இந்த மகஜரைச் சமர்ப்பிக்கின்றேன்.

யாழ்ப்பாணம் - கொழும்பு இடையிலான போக்குவரத்துக்கு முன் அனுமதி பெறும் முறையை பாதுகாப்பு அமைச்சு நடைமுறைப்படுத்தியுள்ளது. சொந்த நாட்டில், ஓர் இடத்தில் இருந்து மற்றோர் இடத்துக்கு மக்கள் செல்ல முன்னனுமதி பெற வேண்டிய இத்தகைய நிலை இலங்கையில் மட்டுமே உள்ளது.

பாதுகாப்பு அமைச்சால் செயற்படுத்தப்படும் இந்தத் திட்டம் அதிருப்தியளிக்கிறது.

பெற்றோர், உற்றார், உறவினர் ஆகியோரைச் சந்திக்க விரும்புபவர்கள், மரணச்சடங்கு, திருமணம் உட்பட குடும்ப நிகழ்வுகளில் கலந்து கொள்ள முனைபவர்கள் ஆகியோரின் உரிமைகள் இந்த நடைமுறையால் மறுக்கப்படுகின்றனர்.

ஏனென்றால் பயண அனுமதி கோரி விண்ணப்பிக்கும் திகதியிலிருந்து அனுமதி கிடைப்பதற்கு ஒரு மாதத்துக்கும் அதிகமான காலம் ஆகிறது. இதைவிட விண்ணப்பித்து விட்டு காத்திருப்பவர்களுக்கு ஏற்படும் பொருள் செலவுகளும் மன உளைச்சல்களும் அளவிடமுடியாதவை.

வெளிநாடுகளில் இருந்து நீண்ட காலத்தின் பின்னர் தமது பெற்றோரையும் உறவினரையும் பார்க்கும் ஆவலில் கொழும்புக்கு வருபவர்கள், பயண அனுமதிக்கு விண்ணப்பித்து விட்டு அனுமதி கிடைக்கும் வரை கொழும்பில் விடுதிகளில் தங்க நேரிடுகிறது. இதனால் அவர்களுக்கு மேலதிகமாக அநாவசியச் செலவு ஏற்படுகிறது. அவசர நிலைமைகளில் கோரப்படும் அநாவ சியமான ஆவணங்கள் மேலும் மக்களைச் சிரமத்துக்கு உள்ளாக்குகின்றன.

உதாரணமாக, மரணச் சடங்கு ஒன்றில் கலந்துகொள்ளச் செல்பவர், செஞ்சிலுவை சர்வதேசக் குழு மரணம் தொடர்பாக அளித்த அத்தாட்சிக் கடிதத்தை சமர்ப்பிக்கும்படி கேட்கப்படுகின்றார்.

துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அந்தக் குடும்பத்தினருடன் இப்படி ஒரு கடிதத்தைக் கோருவது மிகவும் துரதிர்ஷ்டவசமானது.

யாழ்ப்பாணம் செல்ல விண்ணப்பிப்பவர்கள், வேறு ஒரு நாட்டினர் அல்லர் என்பதைப் பாதுகாப்பு அமைச்சு உணரவேண்டும், இலங்கை அரசு வழங்கிய பிறப்புச் சாட்சிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை, சம்பந்தப்பட்டவர் தங்கியிருந்த பகுதியின் பொலீஸ் வழங்கிய பதிவு அறிக்கை இவற்றுடன் பாதுகாப்பு அமைச்சு வழங்கிய விசேட அடையாள அட்டை ஆகியவற்றை வைத்துள்ள அவர்களும் இலங்கையில் வாழ்பவர்களே.

இந்த ஆவணங்கள் பயண அனுமதிக்கான விண்ணப்பத்துடன் ஆதாரமாக இணைக்கப்படும்போதும் வீணான காலதாமதங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. இது தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறையை உறுதிப்படுத்துகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில், நாடாளுமன்ற குழுக்கூட்டங்களில் பல தடவைகள் இந்த விடயத்தை எடுத்துரைத்துள்ளேன்.

ஆனால் அவற்றால் பலனேதும் ஏற்படவில்லை.

பாதுகாப்பு அமைச்சரே இதற்கு முழுப்பொறுப்பு என்பது எனது அபிப்பிராயம். இந்த நடைமுறை விடுதலைப் புலிகளின் ஊடுருவலைத் தடுக்கும் முயற்சி என்று அவர் வாதிடுவாரேயானால் முற்றாக அது பொய்யானதாகும்.

அத்துடன், பயண அனுமதி வழங்கப்படுவது வியாபார ரீதியாக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட அலுவலர்கள் குறுக்குவழியில் பணம் பெறும் நிலை உருவாகியுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் நாடாளுமன்ற பிரதிநிதி என்ற முறையில், இந்த விடயங்களைத் தங்களின் மேலான கவனத்துக்கு கொண்டு வருகிறேன்.

தாங்கள் மனிதாபிமானத்துடன் இந்த விடயத்தை அணுகி ஆவன செய்வீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார். (உ-ஒ)

## சீவல் தொழில் செய்வோருக்கு கடன் உதவி

யாழ்ப்பாணம்,ஜூலை3

கைதடியில் சீவல் தொழிலை மீள ஆரம்பித்துள்ள சீவல் தொழிலாளர்களுக்கு சாவகச்சேரி ப.தெ.வ. கூட்டுறவுச் சங்கத்தினால் கடன் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தொழில் உபகரணங்களைப் பெறுவதற்காக ஒவ்வொரு தொழிலாளிக்கும் 2ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டு வருவதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

கைதடியில் சங்கத்தின் இரு கிளைகள் இயங்கிவருவதாகவும் மேலும் சில கிளைகளைத் திறப்பதற்கு ஏற்பாடுகள் செய்ப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பொது மக்கள் மீதான தாக்குதலுக்கு மறுப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை3

கரணவாய் மேற்குப் பகுதியில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றுப் படம் பார்த்துக்கொண்டிருந்த அறுவரைப் படையினர் கைது செய்து தாககியதாகக் கடந்த 26 ஆம் திகதிய உதயனில் வெளியான செய்தியை பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகச் செய்திக் குறிப்பு ஒன்று மறுத்திருக்கின்றது.

"மேற்படி செய்தி குறித்து, 524 படையணித் தலைமையகத்திடம் கேட்ட போது படையினரால் எவரும் கைது செய்யப்பட்டுத் தாக்கப்பட்டதாக எந்தவொரு செய்தியும் தமக்குக் கிடைக்கவில்லை என 524ஆவது படையணி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

"எனவே மேற்படி செய்திக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் எவ்விதத் தொடாபும் இல்லை" - என்று அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*ஆசிரியர் குறிப்பு:-*

மேற்படி விடயம் குறித்து எமது செய்தியாளர்கள் தற்போது தெரிவித்திருக்கும் தகவல்கள் வருமாறு:-

(1) மேற்படி தாக்குதல் சம்பவம் மண்டான் பகுதியில் உள்ள முகாம் ஒன்றில் 24-06-2001 ஞாயிற்றுக் கிழமை மாலை 5.00 மணியளவில் நடைபெற்றுள்ளது.

(2) முதலில் சின்னத்தம்பி கந்தசாமி(வயது 52), சின்னத்தம்பி செல்வநாயகம் (வயது43), அவரது மனைவி ஆகியோர் தாக்கப்பட்டுள்ளனர்.

(3) பின்னர் கரணவாய் மேற்கில் உள்ள வீடொன்றில் சட்டவிரோத மின்சாரத்தின் மூலம் ரி.வி. படம் பார்த்துக் கொண்டிருந்த கந்தசாமி ஜெயானந்தன் (வயது23), செல்வராசா கமலரூபன்(வயது 15) ஆகியோரையும் படையினர் கூட்டிவந்து முகாமில் வைத்துத் தாக்கியுள்ளனர்.

(4) இந்தத் தாக்குதலுக்கும் சட்டவிரோத மின்சாரப் பாவனைக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என்பதும் படைத் தரப்புக்குத் தகவல் கொடுத்தது தொடர்பான பிரச்சினையே அதற்குக் காரணம் என்றும் இப்போது கூறப்படுகின்றது.

(5) இந்தத் தாக்குதல் சம்பவம் நடைபெற்ற சமயம் அந்த வீதி வழியாகச் சென்று கொண்டிருந்த சுந்தரம் ஜெயராசா(வயது32),சித்தன் குலவீரசிங்கம்(வயது31) ஆகியோரும் முகாமுக்குள் கூட்டிவரப்பட்டுத் தாக்கப்பட்டுள்ளனர். இவர்களில் சுந்தரம் ஜெயராசா கடந்த 27 ஆம் திகதி மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். சித்தன் குலவீரசிங்கம தனியார் ஆஸ்பத்திரியொன்றில் புக்கை கட்டி சிகிச்சை பெற்று வருகின்றார்.

(6) இச்சம்பவங்களில் பாதிக்கப்பட்டோர் வேறு சில செய்தியாளர்களுக்கு முன்னால் வைத்து நமது செயதியாளருக்கு இத்தகவலை நேரில் தெரிவித்திருந்தார்கள். (ஆ-ர்)

## காதல் விவகாரம் தொடர்பான கோஷ்டி மோதலுடன் படையினருக்கும் தொடர்பு?

யாழ்ப்பாணம்,ஜூலை3

சுழிபுரம் - பெரியபுலோ மற்றும் வட்டுக்கோட்டை - கொட்டைக்காடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இரு குழுவினரிடையே நேற்று முன்தினம் இடம்பெற்ற கோஷ்டி மோதலில் நான்கு பெண்கள் காயங்களுக்கு உள்ளாகினர்.

முருகன் மஞ்சுளா, செல்லையா ஜெயமலர், கதிரைமலை சாவித்திரி, சிவராசா தங்கேஸ்வரி ஆகியோரே காயமடைந்த நிலையில் சங்கானை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையின் பின்னர் வீடு திரும்பியுள்ளனர்.

இந்தக் கோஷ்டி மோதலுக்கு காதல் விவகாரமே காரணம் என்றும் -

வட்டுக்கோட்டை - மாவடி முகாமைச் சேர்ந்த இராணுவத்தினரும் இந்த விவகாரம் தொடர்பாக பெரியபுலோ மக்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர் எனத் தெரிகிறது.

ஈ.பி.டி.பியின் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளரும், வலி மேற்கு பிரதேச சபைத் தலைவருமான ந.திரிலோகநாதன் தெரிவித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் விசேட பணிப்பின் பேரில் இந்த விவகாரம் குறித்து 513ஆவது படையணியின் தளபதி, மானிப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோருடன் தான் தொடர்பு கொண்டு பேச்சு நடத்தியதாகவும் -

அப்போது பாதுகாப்புத் தவிர்ந்த சிவில் விவகாரங்களில் படையினர் இனிமேல் தலையிடமாட்டார்கள் என சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தமக்கு வாக்குறுதி தந்ததாகவும் -

ந.திரிலோகநாதன் தெரிவித்தார். (உ-7)

## அதிகாரி உட்பட இரு படையினர் மோதலில் காயம்

கொழும்பு,ஜூலை3

திருகோணமலை மாவட்டம் கம்புறுகமுவவில் கடந்த சனிக்கிழமை இரவு 8.30மணியளவில் இராணுவ அணியொன்றின் மீது சிறுரக ஆயுதங்களை உபயோகித்து விடுதலைப் புலிகள் தாக்கியதாகவும் -

படையினர் திருப்பித் தாக்கியதில், சுமார் 10 நிமிடங்கள் மோதல் தொடர்ந்ததாகவும் -

இதில் படைத் தரப்பில் ஓர் அதிகாரியும் சிப்பாய் ஒருவரும் காயமடைந்ததாகவும் -

விசேட ஊடகத் தகவல் நிலையம் நேற்று வெளியிட்ட களநிலவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## டிப்ளோமா பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜூலை3

தேசிய கல்வி நிறுவனத்தின் கல்வி டிப்ளோமா கற்கைநெறியின் பகுதிII பரீட்சை இம்மாதம் 28ஆம், 29ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றது என்று மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் என் தணிகாசலம்பிள்ளை தெரிவித்தார்.

இந்தப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் இம்மாதம் 16ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (உ-3)

## பத்திரிகை விபசாரத்தில் அரச செய்தி ஊடகங்கள்

### குற்றஞ்சாட்டுகிறது ஐ.தே.கட்சி

கொழும்பு,ஜூலை3

அரசாங்கத்துக்குச் சொந்தமான வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் பத்திரிகை விபசாரத்தில் ஈடுபட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

அரசுக்குச் சாதகமான செய்திகளை மட்டும் வெளியிட்டு வரும் இந்தச் செய்தி ஊடகங்கள் விடுதலைப் புலிகள் பற்றியும் ஐ.தே.கட்சி பற்றியும் உண்மைக்குப் புறம்பான பொய்த் தகவல்களைக் கட்டவிழ்த்து விட்டுள்ளன என்று ஐ.தே.கட்சியின் சிரேஷ்ட தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் செய்தி ஊடகங்கள் உண்மைக்குப் புறம்பான, பக்கச் சார்பான செய்திகளையே வெளியிடுகின்றன என்று அரசாங்கத்துக்குச் சொந்தமான பத்திரிகை ஒன்றின் ஆசிரியப் பிரதிநிதி ஒருவரே ஒப்புக் கொண்டுள்ளார் எனவும் -

பத்திரிகை விபசாரத்தில் ஈடுபட்டு வரும் அரச செய்தி நிறுவனங்களில் தொடர்புசாதனத் திணைக்களப் பணிப்பாளர் ஆரிய ரூபசிங்க ஒரு விபசாரப் பெண்ணாகச் செயற்படுகின்றார் எனவும் -

அந்தத் தலைவர் மேலும் தெரிவித்ததாக செய்தி நிறுவனம் ஒன்று தகவல் வெளியிட்டது. (உ-4)


UNIVERSITY OF JAFFNA, SRILANKA.

FACULTY OF GRADUATE STUDIES.

M.Sc. BIOTECHNOLOGY

Graduates (and those awaiting results) in Chemical, Biological, Medical, Dental, Veterinary, Agricultural and Engineering Sciences Will be considered. Forward application with biodata. All applicants will be required to sit for a qualifying examination and a viva. Full or partial fellowship will be given to the selected candidate. Address correspondance to Registrar, University of Jaffna.

*Closing date : 2001.08.01*

Registrar,
*University of Jaffna.*
2001.07.02

(C/17280)



UNIVERSITY OF JAFFNA, SRILANKA.

FACULTY OF GRADUATE STUDIES.

M.Phil. BIOCHEMISTRY

Graduates (and those awaiting results) in Chemical, Biological, Medical, Dental, Veterinary, Agricultural and Engineering Sciences Will be considered. Forward application with biodata. All applicants will be facing an interview. Full or partial fellowship will be given to the selected candidate. Address correspondence to Registrar, University of Jaffna.

*Closing date : 2001.08.01*

Registrar,
*University of Jaffna.*
2001.07.02

(C/17279)



ஸ்ரீ செல்வா சினிமா

யாழ்ப்பாணம்.

ஈஸ்வர் - மோனிஷா

நடித்த

லவ் சேனல்

10.30, 2.30 (பழைய நேரம்)

புதிய வெளியீடு

(C/17284)


## மரண அறிவித்தல்

### திருமதி செல்லையா இலெட்சுமி

கோகிலாக்கண்டியைப் பிறப்பிடமாகவும் கோப்பாயை வசிப்பிடமாகவும் தற்போது றொட்டியாலடி (றோயல் சேவீஸ் ஸ்ரேசன் முன்பாக) வசித்தவருமாகிய திருமதி செல்லையா இலட்சுமி காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் நாகரத்தினம் (லண்டன்), பூமணி(வன்னி) தங்கமலர், தங்கராஜா (காயத்திரி அரைக்கும் ஆலை உரிமையாளர்), குலசேகரம் (லண்டன்) சகுந்தலா தேவி (கனடா), செல்வகுமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவசுப்பிரமணியம்(லண்டன்), சபாபதிப்பிள்ளை (வன்னி), சிவலோகநாதன் (கனடா), திருமதி அருந்ததி, திருமதி ரஞ்சினி, திருமதி ராதா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(03-07-2001) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3.00 மணியளவில் தகனம் செய்வதற்கு பூதவுடல் பூவோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
செ.தங்கராஜா
(உரிமையாளர், காயத்திரி அரைக்கும் ஆலை, சுன்னாகம்)
திருமதி சு.தங்கமலர்

(C/17285)

## தமிழக ஆளுநரின் ராஜினாமாவை ஜனாதிபதி நாராயணன் ஏற்றார்

சென்னை,ஜூலை3

தமிழக ஆளுநர் பாத்திமா பீவியின் இராஜினாமாவை இந்திய ஜனாதிபதி கே.ஆர்.நாராயணன் ஏற்றுக்கொண்டார்.

இதனை அடுத்து நேற்றுக் காலையே பாத்திமா பீவி ஆளுநர் மாளிகையை விட்டு வெளியேறினார்.

இதேவேளை -

தமிழக ஆளுநரைத் திரும்பப் பெறுவது என மத்திய அரசு எடுத்த முடிவை காங்கிரஸ் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சிகளும் கடுமையாகச் சாடியுள்ளன.

தாம் விரும்பும் விதத்தில் தமிழ் நாட்டு நிலைவரம் தொடர்பாக அறிக்கை அனுப்பாததனாலேயே அரசியல் பழி வாங்கும் வகையில் ஆளுநரைத் திரும்பப் பெறுவது என்று அரசு முடிவு செய்துள்ளது என அக்கட்சிகள் கண்டித்துள்ளன.

இதே காரணத்தைக் கூறி ஆளுநரைத் திரும்பப் பெறும் மத்திய அரசின் முடிவை அ.தி.மு.கவும் கண்டித்துள்ளது. (ம)

## இந்தோனேசியாவில் பெரும் நிலநடுக்கம்

ஜகார்த்தா,ஜூலை3

**இந்தோனேசியாவின் மத்திய மாகாணமான சொலவாஸியில் பெரும் நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது.**

**ரிச்டர் அளவுகோலில் இது 5.6 புள்ளியாகப் பதிவாகியதாக அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.**

**பொருள் சேதங்கள், உயிரிழப்புகள் குறித்து நேற்று மாலை வரை விவரங்கள் எதுவும் தெரியவரவில்லை. (ம)**

## கராச்சியில் குண்டு வெடிப்பு இருவர் பலி; 14 பேர் காயம்

இஸ்லாமாபாத்,ஜூலை3

பாகிஸ்தானின் கராச்சி நகரில் உள்ள திரைஅரங்கு ஒன்றில் குண்டு வெடித்ததில் இருவர் பலியாகினர்; மேலும் 14 பேர் காயமடைந்தனர்.

திரை அரங்கில் திரைப்படம் ஆரமபமான சிறிது நேரத்தில் இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது. ஆயிரத்து 200 இருக்கைகளைக் கொண்ட இந்தத் திரைஅரங்கில், சம்பவம் இடம்பெற்றபோது 400 பேர் மட்டுமே இருந்ததாகக் கூறப்படுகின்றது.

பாகிஸ்தானின் 4 மாகாணங்களில் உள்ள 40 மாவட்டங்களில நேற்று நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களை முன்னிட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்த வேளையில் இந்தக் குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளது. சம்பவத்துக்கு இதுவரை யாரும் பொறுப பேற்கவில்லை. இந்தச் சம்வத்தைத் தொடர்ந்து கராச்சி நகரில் ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

**12 மணிநேர ஹர்த்தாலால்**

## தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் நேற்று இயல்பு வாழ்க்கை பாதிப்பு

சென்னை,ஜூலை3

தமிழ்நாட்டில் தேசிய ஐக்கிய முன்னணி அழைப்பு விடுத்திருந்த ஹர்த்தாலால் நேற்று அங்கு இயல்பு நிலை பாதிக்கப்பட்டிருந்தது.

தமிழ்நாட்டில் ஹர்த்தால் ஓரளவே வெற்றி பெற்றது என்றும் -

பாண்டிச்சேரியில் முழு அளவில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதாகவும் -

செய்திகள் தெரிவிக்கின்றன.

சென்னையில் கடைகள் அனைததும் மூடப்பட்டிருந்தன. பாடசாலைகள் சில மூடப்பட்டிருந்தன; சில திறந்திருந்தன; அரச அலுவலகங்கள் அனைத்தும் திறந்திருந்தன. எனினும் ஊழியர் வரவு குறைவாகவே இருந்தது. வீதிகளில் தனியார் வாகனங்கள் தாராளமாகப் போக்குவரத்தில் ஈடுபட்டன. அரச பஸ்களும் சேவையில் ஈடுபட்டிருந்தன. ஆனால் பயணிகள் எண்ணிக்கை மிகக் குறைவாகவே காணப்பட்டது.

வன்முறைகள் இடம்பெற்றதாக நேற்று மாலை வரை தகவல்கள் எதுவுமில்லை. இருப்பினும் வன்முறைகளில் ஈடுபட எவராவது முயன்றால் அவர்களைக் கண்டவுடன் கடும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

பாண்டிச்சேரியில் கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. போககுவரத்துக்கள் முற்றாக நிறுத்தப்பட்டிருந்தன. பாடசாலைகள், அரச அலுவலகங்கள் மூடியிருந்தன.

பாதுகாப்புக் கருதி மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பொலீஸார் குவிக்கப்பட்டுள்ளனர். (ம)

## இஸ்ரேலியத் தாக்குதலில் 3 பலஸ்தீனர் உயிரிழப்பு

ஜெருசலேம்,ஜூலை3

மேற்குக்கரைப் பகுதியில் இஸ்ரேலிய ஹெலிக்ள் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் பலஸ்தீனர்கள் மூவர் கொல்லப்பட்டனர்.

வீதியில் சென்றுகொண்டிருந்த கார் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. காரில் பயணம் செய்து கொண்டிருந்த மூவரும் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

உயிரிழந்த மூவரும் இஸ்லாமிய ஜிகாத் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்றும் -

இஸ்ரேலில் இடம்பெற்ற பல குண்டுவெடிப்புச் சம்பவங்களுடன் இவர்கள் மூவருக்கும் தொடர்பு இருந்ததாகவும் - இஸ்ரேல் குற்றஞ் சாட்டி உள்ளது.

அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து மேற்குக்கரைப் பகுதியில் "வன்முறைகளற்ற வாரம்" ஒன்றைப் பிரகடனப்படுத்திய பின்னர் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

**விமானத் தாக்குதலின் எதிரொலி**

## இஸ்ரேலுக்குப் பதிலடி வழங்குவதில் சிரியா - லெபனான் கூட்டு முயற்சி

டமாஸ்கஸ்,ஜூலை3

இஸ்ரேலியத் தாக்குதல்களுக்குப் பதிலடி வழங்குவதற்கான நடவடிக்கைகளில் இணைந்து செயற்படுவது என்று சிரிய மற்றும் லெபனான் நாடுகளின் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

கிழக்கு லெபனானில் உள்ள சிரிய ராடர் நிலையத்தின் மீது இஸ்ரேல் நேற்றுமுன்தினம் விமானத் தாக்குதல் நடத்தியது. இதனை அடுத்தே சிரியாவும் லெபனானும் இந்த இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளன.

இஸ்ரேலியத் தாக்குதல்களுக்குப் பதிலடி வழங்கும்போது இரு நாடுகளும் அது குறித்துக் கலந்துரையாடிய பின் கூட்டு நடவடிக்கை எடுப்பது எனவும் இரு நாடுகளும் முடிவு செய்துள்ளன.

கிழக்கு லெபனானில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் இரு சிரியப் படையினரும் ஒரு லெபனானியச் சிப்பாயும் காயமடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை ஹிஸ்புல்லாத் தீவரவாதிகள் இஸ்ரேலில் நடத்திய தாக்குதலுக்குப் பதிலடியாகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. (ம-9)

## அன்றிரவு நடந்தது என்ன?

தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவரது கைது தொடர்பாக ஆராய்வதிலும் பார்க்க அந்த நிலையை உருவாக்கிய சம்பவங்களே இன்றைக்கும் தமிழ்நாட்டில் சுவாரஸ்யமாகப் பேசப்படுகின்றன.

கருணாநிதி ஒரு நாளும் திராவிட முன்னேற்றக கழகத் தலைவராகத் தன்னைத் தனித்துக் கருதவில்லை. திருக்குவளை முத்துவேல் கருணாநிதி என்ற பொருள்பட கட்சியைத் தனது வாழ்க்கையாகக் கொண்டவர் அவர். ஆதலால், கட்சிக்கான அவரது உழைப்பைத் தமிழ்நாடு நன்றாகவே அறியும். அந்த வகையில் அவருக்கு எதிராக நடந்துள்ள கொடூரங்களைப் பார்த்த தமிழ்நாடு, தமது உள்ளக் கிடக்கைகளை ஆர்ப்பாட்டங்கள், வன முறைகள் என்ற வகையில் வெளிக் காட்டிக்கொண்டிருக்கின்றது.

கருணாநிதியைக் கைது செய்வதற்கான ஆரம்பக்கட்டப் பணிகள் யாவும் முதல் நாள் மாலையே தொடங்கிவிட்டன. பொலீஸ் உயர் அதிகாரிகளுக்கு இரகசியத் தகவல்கள் போயின. எல்லா மாவட்டப் பொலீஸ் உயர் அதிகாரிகளும் உஷார்ப்படுத்தப்பட்டனர். இரவு 9 மணிக்கு தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பொலீஸாரும் பணிக்கு அழைக்கப்பட்டனர். அப்போதே ஏதோ விபரீதம் நடக்கப் போகின்றது என்பதைப் பொலீஸார் தெரிந்துகொண்டனர்.

இரவு பத்து மணியளவில் அனைத்துப் பொலீஸாரையும் வீதி ரோந்துப் பணிக்கு வருமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

சற்று நேரத்திற்கெல்லாம் அரசின் இரகசிய உத்தரவு மெல்லக் கசியத தொடங்கியது. சென்னை நகர மேயர் ஸ்டாலினைக் கைது செய்ய அரசு திட்டமிட்டிருப்பதாகச் செய்திகள் பரவத் தொடங்கின. இரவு 11.30 மணியளவில் சென்னையில் டீ.ஜி.பி.இரவீந்திரநாத், உளவுத்துறை கூடுதல் டி.ஜி.பியும் குற்றப் பிரிவுப் பொறுப்பாளருமான வெங்கடக்கிருஷ்ணன் ஆகியோருக்கான கூட்டம் சென்னை நகரப் பொலீஸ் ஆணையாளர் முத்துககருப்பன் தலைமையில் நடந்தது.

நள்ளிரவு சி.பி.சி.ஐ.டி.பொலீஸ் அதிகாரிகள் வாடகை வான்களை அமர்த்தினர். அந்த வான்களில் ஏராளமான பொலீஸார் ஏற்றப்பட்டனர். வான்களில் இருப்பவர்களுக்கு "முக்கியமான குற்றவாளிகளைக் கைது செய்யப் போகிறோம். மேலதிகாரிகளின் உத்தரவை அப்படியே நிறைவேற்ற வேண்டும்" என்று மட்டுமே சொல்லப்பட்டது.

வான்களிலும் ஜீப்புகளிலும் ஏற்றப்பட்ட பொலீஸார், உயர் அதிகாரிகளின் கார்களைப் பின்தொடர்ந்தனர். மூன்று வான்களில் இருந்த பொலீஸார் முன்னாள் முதல்வர் கருணாநிதி வீடிருந்த ஒலிவர் வீதியைச் சுற்றிவளைத்து முற்றுகையிட்டனர்.

12.30 மணியளவில் ஐந்து வான்களில் ஏற்றப்பட்ட பொலீஸார் கோபாலபுரம் பகுதியை முற்றுகையிட்டனர். அதேபோல் சென்னை நகர மேயர் ஸ்டாலின் வசிக்கும் வேளச்சேரி வீட்டைப் பத்துக்கு மேற்பட்ட வான்களில் சென்ற பொலீஸார் முற்றுகையிட்டனர்.

அதிகாலை 1.10 மணியளவில் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள தி.மு.கவின் முக்கிய புள்ளிகளின் வீடுகளைக் கண்காணிக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

## கருணாநிதி கைதின் பின்னணி

1.30 மணிக்கு 'ஆக்ஷன் ஸ்டார்ட்' என்ற உத்தரவு 'வயர்லஸ்' மூலம் பறந்தது. முதலில் ஒலிவர் வீதியில் உள்ள கருணாநிதியின் வீட்டில் நூற்றுக்கு மேற்பட்ட பொலீஸார் திமுதிமு எனப் புகுந்தனர். வீட்டின் கீழ்த் தளத்தில் இருந்த இரண்டு தரைத் தொலைபேசி இணைப்புக்களையும் பொலீஸார் துண்டித்தனர்.

மேல்மாடியில் உள்ள அறையில் கருணாநிதியும் அவரது மனைவி ராஜாத்தி அம்மாளும் தூங்கிக்கொண்டு இருந்தனர். படுக்கை அறைக் கதவை உடைத்து உள்ளே நுழைந்த பொலீஸார் 25 பேர் அவர்களது படுக்கையைச் சுற்றி நின்றனர். இரண்டு பெண் பொலீஸாரும் உடன் இருந்தனர்.

கைது செய்ய வந்திருப்பதாகப் பொலீஸார் தெரிவித்ததும் கருணாநிதி "கைது வாரண்ட் எங்கே?" என்று கேட்டார். அதன் பின்னர் அவருக்கும் பொலீஸாருக்கும் இடையே வாக்குவாதம் தொடங்கியது. உடனே தனது 'செல்போன்' மூலமாக மத்திய அமைச்சர் முரசொலிமாறனை அழைத்தார் கருணாநிதி.

முரசொலிமாறன் வந்ததும் படுக்கை அறையிலேயே பொலீஸாருடன் ரகளை ஆரம்பமானது. கருணாநிதி மீது கை வைக்கக் கூடாது என்று மாறன் கூறினார். இதனால் பொலீஸார் ஆவேசம் அடைந்து கருணாநிதியை அலேக்காகத் தூக்கினர். அவர் தள்ளாடி எழுந்து நின்றதும் அவரது காலை பொலீஸார் மிதித்துவிட்டனர். இதனால் அவர் நிலை தடுமாறிக் கீழே விழுந்தார். அவரை மாறனின் இரண்டாவது மகன் தயாநிதி மாறன் அப்படியே தாங்கிப் பிடித்தார்.

பின்னர் கருணாநிதியை பொலீஸார் வலுக்கட்டாயமாகப் மாடிப்படிகளில் தரதரவென இழுத்துக் கீழே இறங்கினர். அதைத் தடுக்க முயற்சித்த முரசொலிமாறன் கீழே தள்ளப்பட்டார். இதில் அவரது கண்ணாடி உடைந்தது. அதை மிதித்ததில் அவரது காலில் காயமேற்பட்டு இரத்தம் வழிந்தது.

அதிகாலை 2.15 மணியளவில் கருணாநிதியை ஏற்றிக்கொண்ட கார், ராஜாஜி தோட்டத்தில் உள்ள சி.பி.சி.ஐ.டி. அலுவலகத்துக்குப் பறந்தது.

ராஜாத்தியம்மாள் வேறொரு காரில விரைந்தார். அவரது கார் அண்ணா சிலை அருகே தடுத்து நிறுத்தப்பட்டது. பொலீஸாருடன் வாக்குவாதம் செய்த பின்னர் அவர் சி.பி.சி.ஐ.டி. அலுவலகம் வரை நடந்து செல்ல அனுமதிக்கப்பட்டார். அவருக்குத் துணையாக எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் பரிதி இளம்வழுதியும், சேப்பாக்கம் தி.மு.க.பகுதிச் செயலாளர் சுரேஷ் குமாரும் உடன் சென்றனர்.

2.45 மணியாகியும் ராஜாத்தியம்மாளைப் பொலீஸார் சி.பி.சி.ஐ.டி. அலுவலகத்துக்கு உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. கண்ணீரோடு அவர் 'கேட்' அருகே நின்றுகொண்டிருந்தார். 'கேட்டை' திறக்கும்படி பரிதி இளம்வழுதி பொலீஸாரிடம் வாக்குவாதம் செய்தார்.

3.00 மணிக்கெல்லாம் மத்திய அமைச்சர் முரசொலிமாறன் சிவப்பு விளக்குப் பொருத்தப்பட்ட காரில் அங்கு வந்தார். அந்தக் காரில் தயாளு அம்மாள், மு.க.தமிழரசு, செல்வி, டி.ஆர்.பாலு, மாறனின் மகள் (டாக்டர்) ஆகியோர் இருந்தனர். அதே காரில் ராஜாத்தியம்மாளும் ஏறிக்கொண்டார். கார் 'கேட்' அருகே நின்றது.

காரிலிருந்து டி.ஆர்.பாலு மீண்டும் இறங்கிச் சென்று பொலீஸாருடன் கடும் வாக்குவாதம் செய்தார். அவரது கூச்சலைத் பொலீஸ் துணை ஆணையாளர் பிரபாகரன் கண்டு கொள்ளவே இல்லை. கதவு திறக்க மாட்டோம் என்று கண்டிப்பாகக் கூறினார் பிரபாகரன்.

உடனே தமிழரசு, டி.ஆர்.பாலு, பரிதி இளம்வழுதி ஆகியோர் 'கேட்'டைப் பிடித்து இழுத்தனர். 'கேட்'டுக்கு அந்தப் பக்கம் 40 பொலீஸார் 'கேட்'டைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருந்தனர். "கேட்டைக் காரால் இடித்துத் தள்ளுங்கள்!" என்று தமிழரசு ஆவேசமாகக் கத்தினார்.

மாறனின் சிவப்பு விளக்கு பொருத்தப்பட்ட கார் 'கேட்'டை இடித்துத் தள்ளியது. 'கேட்'டுக்கு அந்தப் பக்கம் நின்றிருந்த பொலீஸாருக்குப் பயம் வந்துவிட்டது 'கேட்'டை விட்டுவிட்டு விலகி ஓடினார். 'கேட்'டை இடித்துக் கொண்டு கார் உள்ளே நுழையும் போது சில பத்திரிகை படப்பிடிப்பாளர்களும், தொலைக்காட்சி படப்பிடிப்பாளர்களும் உள்ளே ஓடினர். பொலீஸார் அவர்களை விரட்டிப்பிடித்து அடித்தனர். அடியையும் வாங்கிக் கொண்டு சில படப்பிடிப்பாளர்கள் உள்ளே ஓடிவிட்டனர். படப்பிடிப்பாளர்கள் உள்ளே சென்றதால் ஆவேசமான துணை ஆணையாளர் பிரபாகரன் "பத்திரிகைக் காரர்களை அடிச்சு விரட்டுங்கடா" என்று உத்தரவு பிறப்பித்தார். பொலீஸார் உடனே 'கேட்'டுக்கு வெளியே இருந்த படப்பிடிப்பாளர்களையும் அடித்து உதைத்தனர். இரண்டு புகைப் படப்பிடிப்பாளர்களை வானிலும் ஏற்றி அடித்தனர்.

மாறனுடன் வந்தவர்கள் அனைவரும் சி.பி.சி.ஐ.டி. அலுவலகத்தில் உள்ள அறை, அறையாகத் தேடினார். எனினும் கருணாநிதி எங்கிருக்கிறார் என்பதை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

அரைமணி நேரம் கழித்து டி.ஆர்.பாலு மட்டும் வெளியே வந்தார். "என்ன நடக்குது இந்த ஆட்சியில்? எங்கள் தலைவரை எங்கே வைத்திருக்கிறீர்கள்? ஒலிவர் வீதியில் மத்திய அமைச்சர் என்றும் பாராமல் முரசொலி மாறனைப் பொலீஸார் கடுமையாகத் தாகக்கியுள்ளனர்" - என்று ஆவேசமாகக் கூறிச்சென்றார்.

அதிகாலை முழுவதும் ராஜாஜித் தோட்டம் பதற்றமாகவே காணப்பட்டது. எல்லாப் பத்திரிகைச் செய்தியாளர்களும் குவிந்தனர். அவர்களைப் பொலீஸார் தடியால் அடித்து விரட்டினர். சில படப்பிடிப்பாளர்களை பொலீஸார் வலுக்கட்டாயமாக வானில் ஏற்றி வேப்பேரி பொலீஸ் நிலையத்துக் கொண்டு சென்றனர்.

சுமார் 4.15 மணிக்கு கருணாநிதியைப் பொலீஸார் கீழ்ப்பாக்கத்தில் உள்ள டெய்லர்ஸ் வீதியில் இருக்கும் நீதிபதி அசோக்குமார் வீட்டுக்கு அழைத்துச் சென்றனர். அந்த வீதிக்குக கார் வந்ததும் திடீரென வேறு திசையில் அது சென்றது. பொலீஸ் ஆணையாளர் அலுவலகத்துக்கு கருணாநிதி கொண்டு செல்லப்பட்டார். ஒரு நிமிடங்களில் கருணாநிதியை அங்கிருந்து மீண்டும் காரில் ஏற்றிக் கொண்டு வேப்பேரி பொலீஸ் நிலையம் சென்றனர். அங்கு பொலீஸ் நிலையத்தில் அவர் தடுத்து வைக்கப்பட்டார்.

அதிகாலை 4.30 மணிக்கு கருணாநிதியை பொலீஸார் நீதிபதி அசோக்குமார் வீட்டுக்குக் கொண்டு சென்றனர். அங்கு சுமார் ஒன்றரை மணி நேரத்துக்கு மேல் இருந்தார் கருணாநிதி. அப்போது அங்கு மாறனும் ஏனையோரும் பிரசன்னமாயிருந்தனர்.

நீதிபதியின் உத்தரவுப்படி கருணாநிதியை அரசு பொது மருத்துவமனைக்கு விடிந்ததும் அழைத்துச் செல்வதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

ஆனால், பொலீஸார் கருணாநிதியை அரச பொதுமருத்துவமனைக்கு அழைத்துச் செல்லாமல் நேராக மத்திய சிறைக்கு அழைத்துச் சென்றனர்.

சுமார் 6.45 மணியளவில் சிறை வாசலில் ஒரு நாற்காலி போட்டு அதில அமரும்படி கருணாநிதிக்கு உத்தரவிட்டார் துணை ஆணையாளர் பிரபாகரன். "ஏன் அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லாமல், இங்கு கொண்டு வந்தீர்கள்?" என்று கேட்டார் கருணாநிதி. "டாக்டர்கள் இங்கேயே உங்களைப் பரிசோதிப்பார்கள்" என்று பொலீஸார் தெரிவித்ததும் அதிர்ச்சி அடைந்தார் கருணாநிதி. "நீதிபதி உத்தரவை மதிக்காமல் நீங்கள் செயறபட்டால், நான் சிறைக்குள் வரமாட்டேன்" என்று கூறி சிறைமுன்பாக மகள் செல்வியுடன் தரையில் அமர்ந்து சத்தியாக்கிரகம் செய்தார்.

மருத்துவர்கள் வந்து பரிசோதித்த பின்னர் சரியாக 7.10 மணிக்கு கருணாநிதியைப் பொலீஸார் வலுக்கட்டாயமாக எழுப்பி சிறைக்குள் அழைத்துச் சென்றனர். அவருடன் செல்வி, குடும்ப டாக்டர் கோபால் ஆகியோரும் சென்றனர். ❖

# அவசரகாலச் சட்டத்தை இம்முறை ஜே.வி.பி. எதிர்த்து வாக்களிக்கும்

## பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 3

அவசரகாலச் சட்டத்தை இம்முறை வழமைக்கு மாறாக ஜே. வி. பி. எதிர்த்து வாக்களிக்கும்.

ஜே. வி. பியின் பிரசாரச் செயலாளரும், எம்.பியுமான விமல்வீரவன்ச இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய விசேட பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:—

அவசரகாலச்சட்டம் தோற்கடிக்கப்பட்டால் விடுதலைப்புலிகள் மீதான தடை நீங்கும் என்பது ஒரு மாயை.

அவசரகாலச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அரசாங்கம் விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாகத் தனது அடக்குமுறைகளையே நடைமுறைப்படுத்துகின்றது.

அவசர காலச் சட்டம்தான் புலிகள் இயக்கம் மீதான தடையைக் காப்பாற்றுகின்றது என்றால் அதற்குப் பதிலாக புதிய சட்டம் ஒன்றை நாடாளுமன்றம் மூலம் நடைமுறைப்படுத்தலாம்.

இவ்வாறு அரசு புதிய சட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துமானால் நாம் அதற்கு ஆதரவாக வாக்களிப்போம் என்று விமல் வீரவன்ச மேலும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் அவசர காலச்சட்டத்திற்கான வாக்களிப்பின்போது வழமையாக ஜே. வி. பி. கலந்துகொள்வதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-7)

# ஹக்கீம் சகாக்கள் 6 பேருடன் ஞாயிறு மக்காவுக்குப் பயணம்

கொழும்பு, ஜூலை 3

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மக்கா பயணமானார்.

முஸ்லிம் காங்கிரஸுக்குள் தற்போது ஏற்பட்டுள்ள முறுகல் நிலையை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் ''உம்ரா'' கடமையை நிறைவேற்றுவதற்காக இவர் மக்கா சென்றுள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ரவூப் ஹக்கீமுடன் அவருக்கு ஆதரவு வழங்கும் 6 எம். பிக்களும் மக்கா சென்றுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (க-7)

# பருத்தித்துறை பஸ் நிலையத்தில் மலசலகூடம் கட்ட ஆட்சேபம்

வடமராட்சி, ஜூலை 3

பருத்தித்துறை பஸ் நிலையத்தில் பொது மலசலகூடம் அமைப்பதற்கு ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்கிகள், வர்த்தக நிலையங்கள் அமைந்துள்ள பொது மக்கள் அதிகம் கூடும் இடத்தில் மலசலகூடம் அமைக்கப்படுவதால் சுகாதாரச் சீர்கேடும், நகருக்கு வந்துசெல்லும்பொதுமக்களுக்குப்பெரும் அசௌகரியமும் ஏற்படும் எனப் பருத்தித்துறை நகர வர்த்தகர்கள் நகரசபை நிர்வாகத்திற்குச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பாகப் பருத்தித்துறை நகர வர்த்தகர்கள் பருத்தித்துறை ஈ. பி. டி. பி. அமைப்பாளர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரனிடமும் முறையிட்டுள்ளனர்.

நகரமையப் பகுதியில் மலசலகூடம் அமைக்கக் கடந்த 28 ஆம் திகதி பருத்தித்துறை நகரசபையால் அடிக்கல் நடப்பட்டுள்ளது. இப்பகுதியில் மலசலகூடம் அமைப்பது நகரமக்களைப் புறந்தள்ளுவதும் அசிங்கப்படுத்துவதுமாகும். ஆதலால் இந்த நடவடிக்கையை உடன் நிறுத்தி நகர மக்களையும், வர்த்தக நிறுவனங்களையும் பாதுகாக்குமாறு வேண்டுகிறோம் என அம் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-173)

## யாழ். மாவட்டப் பாடசாலைகளின்

# 8,500 மாணவருக்கு விரைவில் சத்துணவு வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் கல்வி கற்கின்ற வறுமைக்கோட்டின் கீழ் வாழும் சுமார் 8 ஆயிரத்து 500 மாணவர்களுக்கு சத்துணவு வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டின் பேரில் பாடசாலைகளில் கல்வி கற்று வருகின்ற மாணவர்களில்—

இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழ்வோரும், வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளவர்களுமே இதற்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் யாழ். கல்வி வலயத்தில் நடைபெற்றது. இதில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை, வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஐவர், முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர்கள்ஐவர் மற்றும் கோட்டக் கல்வி அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

குறிப்பிட்ட மாணவர்களுக்கு வழங்குவதற்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஊட்டச்சத்துக்கள் கொண்ட உணவு இங்கு எடுத்து வரப்பட்டுள்ளது. (க-10)

# சங்கானையில் கண் பரிசோதனை முகாம்

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் சங்கானை ப. நோ. கூ. சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தும் விழிவெண்படலத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான (கற்றாக்) இலவச கண் பரிசோதனை முகாம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8 மணிக்கு சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். ஆஸ்பத்திரியைச் சேர்ந்த கண்சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ். குகதாசன் பரிசோதனை முகாமை நடத்துவார்.

சுழிபுரம், சித்தன்கேணி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு, சண்டிலிப்பாய், வட்டுக்கோட்டை, சங்கானை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நலிவுற்ற முதியவர்களுக்காக இந்த முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (க-7)

# தொழில்நுட்பக் கல்லூரியில் பயிற்சி நெறிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள பயிற்சி நெறிகளுக்குத் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வீட்டு மின்இணைப்பு மற்றும் மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் திருத்துதலும், பராமரித்தலும் ஆகிய இரண்டு பயிற்சி நெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆறுமாதங்கள் முழுநேரப் பயிற்சி வகுப்புகளாக நடைபெறவுள்ள இப்பயிற்சி நெறியில் பயில விருப்புவோர் உடனடியாகத் தொழில் நுட்பக் கல்லூரியுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அதிபர் எஸ். செந்தில்நாதன் தெரிவித்துள்ளார். (க-10)

# ஆய்வுரை

யாழ்ப்பாணம் ஜூலை 3

யாழ். பல்கலைக்கழக சமூகவியல் சமூகத்தின் ஏற்பாட்டில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு 'சமூகமாற்றத்தில் பண்பாடு' என்ற கருப்பொருளில் ஆய்வுரை ஒன்று நடைபெறவுள்ளது.

நூலக கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ள இந்த ஆய்வுரையை கலாநிதி இ. முருகையன் நிகழ்த்தவுள்ளார்.

ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து பயன்பெறுமாறு சமூகவியல் சமூகம் அழைப்பு விடுத்துள்ளது. (ஐ-5)

# அமைச்சரிடம் கோரிக்கை

எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் நடைபெற உள்ள இலங்கை நிர்வாக சேவைக்கான ஆள்சேர்ப்புப் பரீட்சையில், எழுதுநர்கள் முதுமுறை அடிப்படையில் பரீட்சை எழுதுவதற்கும் முதுமுறை அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவதற்கும் ஒரு குறிப்பிட்ட விதத்தை ஒதுக்கித் தருமாறு பொது எழுதுவினைஞர் சேவையில் அதியுயர் சிறப்பு வகுப்பைச் சேர்ந்த தொழிற்சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடக்கு — கிழக்கு புனரமைப்பு, புனர்நிர்மாண அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் தொழிற்சங்கத்தினர் விடுத்துள்ள கோரிக்கையில் —

ஜூன் மாதம் 26 ஆம் திகதியுடன் முடிவடைந்த விண்ணப்பத் திகதியின் காலத்தை நீடித்துத் தருமாறும் —

இரண்டு தடவைக்கு மேல் இப்பரீட்சையை எடுக்க முடியாது என்ற விதிமுறையை இரத்துச் செய்துஎழுதுவினைஞர்கள் பரீட்சைக்குத்தோற்ற அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுள்ளனர். (க-152)

# முன்பள்ளி ஆசிரியருக்கு உதவுதொகை

யாழ். மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு உதவு தொகையாக 500 ரூபா பணம் முதற்கட்டமாக வழங்கப்படவுள்ளது.

கடந்த ஜூன் மாதத்தில் இருந்து வழங்கப்படவுள்ள மேற்படி பணமானது இந்த மாதம் வழங்கப்படவுள்ளதாகவும் இதற்கான அனுமதியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கியுள்ளதாகவும் யாழ். கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்தனர். (க-10)


# 32 ஆம் நாள் நினைவஞ்சலி



பூவுலகில்: 31 — 01 — 1936

விண்ணுலகில்: 02 — 06 — 2001

## அமரர் சின்னத்தம்பி துரைச்சாமி

முப்பத்திரண்டு நாள் சென்றதப்பா — எம்
மூச்சினிலே மூழ்கி விட்டீரப்பா!
பாசத்தால் பலகாலம் வாழ்ந்தெம்மை
பக்குவமாய் வளர்த்தெடுத்து வாழ்வித்தீரப்பா!
காலத்தால் காலன் கணைவீச — எம்
கண்ணிலே கண்மணியாகி விட்டீரப்பா!
கண்ணீரால் தினம் தினம் நாம் கலங்க
கண்மணியாய் நீரதனுள் கலந்து நிற்க
எம்பிரான் பணி இதுவன்றோ
ஏதுமறியோம் பராபரமே?

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இன்று (03 - 07 - 2001) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி:- உருக்குமணி,

பிள்ளைகள்:- கௌரியாம்பாள், செந்தில்வேல் (லண்டன்), தகிலாம்பாள், மனோகராம்பாள்,

மருமக்கள்:- சந்திரராசா, (கமநல கேந்திர நிலையம், உடுவில்), கீதாஞ்சினி (இந்தியா),

பேரப்பிள்ளைகள்:- துர்க்கா (இந்தியா), துஷ்யந்தன் (இந்தியா), விதுஜாம்பாள் (தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி).

துர்க்காபுரம், மல்லாகம். (89671)



# நெஞ்சை விட்டு நீங்காத முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 12 — 04 — 1927

மறைவு: 13 — 07 — 2000

## அமரர் தம்பு தர்மலிங்கம்

எத்தனை வருடங்கள் சென்றாலும்
ஆறாது எங்கள் துயர்!
எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
உயர் பண்புகள் உடையவராய்
பாசத்துடன் வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
நாங்கள் உம்மை மறவோம் சீவியத்தில்;
எம்மோடு வாழ்ந்து மரணத்தால் பிரிந்த
எம் அன்புத் தெய்வத்தின் ஆன்மா
மோட்ச வீட்டில் இளைப்பாற நாம் காலமெல்லாம்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்.

கோண்டாவில். (89674)

## உதயன்

## புதிய போர்முனை திறப்போம்!

எமது சமுதாயத்தில் ஒழுக்கக் கட்டுப்பாடுகள் சீரழிந்து போய்க்கொண்டிருக்கின்றன என்று கவலை தெரிவித்திருக்கின்றார் யாழ்.மாவட்ட நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா.

சமூகச் சீரழிவுகளை - அவற்றின் விளைவுகளை - பாதிப்புக்களை - தினசரி நீதிமன்றத்தில், நீதிபதி ஆசனத்தில் இருந்தவாறு பார்த்துப் பார்த்து அவதானித்துச் சலித்துப்போன ஒருவரிடமிருந்து வேதனையுடன் வெளிப்பட்டிருக்கும் குரல் இது.

நமது வீட்டில் - குடும்பத்தில் - பக்கத்தில் - வீதியில் - நமது கிராமத்தில் - ஊரில் - நகரில் - நாம் தினசரி கவலையுடன் எதிர்கொள்ளும் யதார்த்த நிலையை நீதிபதி தனது வாயாலும் உறுதிப்படுத்தியிருக்கின்றார்.

ஒழுக்கக் கட்டுப்பாட்டுச் சீரழிவில் இருந்து நமது சமூகத்தைக் காப்பாற்ற வேண்டிய அவசர - அவசிய - பொறுப்பில் நாம் இருக்கிறோம்.

சமூக விழுமியங்களை மறந்து சமுதாய சீரழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் நமது சமூகத்தை அதிலிருந்து விடுவிப்பது எங்ஙனம்?

நீதிபதி விக்னராஜா அதற்குத் தெளிவான பதிலையும் முன்வைத்திருக்கின்றார்.

ஒழுக்கக் கட்டுப்பாடுகள் சீரழிந்து செல்வதற்கு எவரையும் குறைகூறிப் பயனில்லை. நாம் அனைவரும் எமது கடமைகளைச் சரிவரச் செய்தால் இந்தச் சமூகச் சீர்கேடுகளை இல்லாமற் செய்ய முடியும் என்று நீதிபதி சுட்டிக் காட்டுகின்றார்.

அதாவது சமூகத்தின் ஒவ்வொரு அங்கத்தவனும் தனது கடமையை - பொறுப்பை - பணியை - சரிவரப் புரிந்துகொண்டு நியாயத்துடன் பணியாற்றுவானாயின் எல்லாம் சரியாகவே நடக்கும். சமூகச் சீர்கேடுகளைக்கூட ஒழித்துவிட முடியும்.

இந்த ஆலோசனையைத்தான் பகவத்கீதையிலே "கடமையைச் செய்; பலனை எதிர்பாராதே" என்று திருவாய் மொழியாகத் தந்தருளினான் பகவான் கிருஷ்ணர்.

சமூகம் சீரழிந்து விட்டது என்றோ, மற்றவன் சமூகச் சீரழிவு செய்கின்றான் என்று குறை கூறிக்கொண்டோ திரிவதை விடுத்து, எமது மனச்சாட்சிக்கு நேர்மையாக எமது கடமைகளை நாம் செய்யவேண்டும். அவ்வாறு ஒவ்வொருவரும் தன் பொறுப்பை உணர்ந்து பணியாற்றும்போது சமூகச் சீரழிவு என்ற அரக்கன் ஓடி ஒழித்துவிடுவான்; அவன் ஓங்கி வளர்வதற்குச் சமூகத்தில் இடமில்லாமல் போய்விடும்.

பொறுப்பில் உள்ளவர்கள் மனச்சாட்சிக்கு விரோதமாக - சட்டம், ஒழுங்கைப் பின்பற்றாமல் - நடந்தால் அதன் பிரதிபலிப்பு மக்களை - சமூகத்தை - தாக்கும் என்று நீதிபதி விக்னராஜா குறிப்பிடும் கருத்து நோக்கற்பாலது.

இந்த ஆலோசனை பொது மக்களுக்கு மட்டுமல்ல, ஆட்சியிலிருப்பவர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும், அதிகாரிகளுக்கும்கூட அப்படியே பொருந்தும்.

நமது கல்வி முறைகளும், இளம் சந்ததிகளை வழிநடத்தும் நமது தலைமுறையும் இப்போது இழைக்கும் தவறுகளுக்காக நமது சமூகம் - இனம் - காலங் காலமாக - தலைமுறை தலைமுறையாக - விலைகொடுக்க வேண்டி நேரிடலாம். எனவே சமுதாயச் சீரழிவிலிருந்து சமூகத்தைக் காப்பாற்ற இன்றே திடசங்கற்பம் பூண்டு, சீரழிவுக்கு எதிராகப் புதிய போர்முனை ஒன்றைத் திறப்போம்!

## அமிர்தலிங்கத்தின் பாரியார் மீண்டும் அரசியலுக்கு வருகிறார்

### லண்டன் வைபவத்தில் அவரே அறிவிப்பு

லண்டன்,ஜூலை3

இலங்கை அரசியலில் மீண்டும் ஈடுபடப்போவதாக திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் செயலாளர் நாயகம் அமிர்தலிங்கத்தின் பாரியாரான இவர் தனது 15 வருட கால அஞ்ஞாத வாசத்தின் பின்னர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

"தமிழரசுக் கட்சி" மலரின் மறுபிரசுர வெளியீட்டு விழா நேற்று முன தினம் லண்டனில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொணடு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஈழத் தமிழர்களுக்கான உரிமைகளை மீட்டெடுக்கும் வகையில் தான இந்த முடிவை எடுத்திருப்பதாகவும் -

இதற்காக விரைவில் கொழும்பு திரும்பவுள்ளதாகவும் -

மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி இந்த நூல் வெளியீட்டுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். (க-7-3)

## நாட்டு நடப்பு

### ரியூட்டறி - V

மூன்றுசில்லு சைக்கிள் ஒன்றில்
மூச்சுவாங்க ஓடுதொன்று
ஆண்டதற்கு ஐந்தும் இல்லை
அப்பனும் பின்னால் போறான்
ஓடியே அதுவும் அங்கு
உட்புக வீடு ஒன்றில்
கூட்டியே பாலர்க்கு அங்கு
கொடுக்கிறார் ரியூசன் ரீச்சர்.

- விகடகவி -

## பிள்ளைகளை வெளிநாட்டுக் கனவுகளுடன் வளர்க்காதீர்; ஆர்வமுள்ள துறையில் அவர்களை ஈடுபடுத்துங்கள்!

### பெற்றோருக்கான கருத்தரங்கில் கல்வி அதிகாரி புத்திமதி

யாழ்ப்பாணம்,ஜூலை3

வெளிநாட்டுக் கனவுகளுடன் உங்கள் பிள்ளைகளை வளர்க்காதீர்கள். கல்வியில் ஆர்வமில்லாத பிள்ளைகளை அவர்களுக்கு ஆர்வமுள்ள துறையில் ஈடுபடுத்துங்கள்.

- இவ்வாறு கடந்த சனிக்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற புனித ஜோண் பொஸ்கோ மாணவர்களது கல்வியில் மேம்பாடு உருவாக்கல் தொடர்பான பெற்றோருக்கான கருத்தரங்கில் உரையாற்றிய பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் அதிபரும், மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையின் உதவிக் கல்விப் பணிப்பாளருமான கவிஞர் சோ.பத்மநாதன் தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

பிள்ளைகளின் வார்த்தைகள், செயற்பாடுகள் ஆகியவற்றுக்கு மதிப்பளியுங்கள். அவர்களை எதிர்காலத்தில் நற்பிரஜைகளாக்க வேண்டியது உங்களது கடமையாகும். அவர்களுக்குப் பரந்த சிந்தனை இருக்க வேண்டும்.

ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பீட்சையில் உங்கள் பிள்ளைகள் சித்தியடையவில்லை என்றால் அதற்காக மனதை அலைய விடாதீர்கள். அதுமட்டும் மாணவர்களின் திறமையைத் தீர்மானிக்கும் பரீட்சை இல்லை. அதன்பிறகு வேறு பல பரீட்சைகளும் உண்டு. புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையாத மாணவன் பல்கலைக்கழகத்துக்குச் செல்லக்கூடியவாறு பின்பு கல்வியில் முன்னுக்கு வரலாம். எனவே பிள்ளைகளைத் தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்துங்கள் - என்றார்.

அருட்தந்தை என்.ஜே.இராஜநாயகம் தமதுரையில் -

தாய் - சேய் உறவில் நன்றாக வளர்ந்த குழந்தைகள் எந்தப் பிரச்சினையையும் சமாளிக்கக் கூடிய திறமை உடையவர்களாக இருப்பார்கள். பிள்ளைகளுக்குத் தாயின் அரவணைப்பு எப்போதும் இருக்க வேண்டும். அந்த அரவணைப்பே தனது பாதுகாப்பு என்று பிள்ளை நினைக்கிறது. அது அவர்களுக்கு நம்பிக்கையைக் கொடுக்கிறது.

அடித்துப் பயமுறுத்தாமல் தவறு செய்யும்போது புத்திமதி சொன்னால் அடுத்த தடவை அவர்கள் தவறு செய்ய மாட்டார்கள். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்று சொல்வார்கள் ஐந்தில் வளைகக வேண்டியது தாயின் கடமையாகும்.

#### பஞ்சு போன்றவர்கள் குழந்தைகள்

குழந்தைகள் பஞ்சு போன்றவர்கள். பஞ்சு எவ்வாறு நீரை உறிஞ்சிக் கொள்கிறதோ அது போலத்தான் அவர்களும் நல்லது கெட்டதைப் பாகுபாடு இன்றிப் பழகிவிடுவார்கள். நல்ல பிள்ளைகளை உருவாக்குவது பெற்றோர்தான் என்று தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபையின் மேயர் நடராசா ரவிராஜ் தமதுரையில்:-

வளர்ந்து வரும் நாகரிக உலகில் சிறுவர்களின் புத்திக் கூர்மை அதிகம். அவர்கள்தான் இந்த நாட்டின் எதிர்காலப் பிரஜைகள். அவர்களை இந்த மண்ணின் பெருமை மிக்க மனிதர்களாக மாற்றவேண்டும். அதற்கான சிறந்த வழிநடத்தல் பிள்ளைகளுக்கு அவசியம். எமது பிரதேசத்தில் தற்பொழுது நிம்மதியற்ற, நிச்சயமற்ற வாழ்க்கை உள்ளது. சமய, சமூக, பொருளாதார நிலைமைகள் மோசமாக உள்ளன. இவ்வாறான நிலையிலும் எமது பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக நாங்கள் வாழ வேண்டும் என்று குறிப்பிட்டார். இந்த நிகழ்வில் சுமார் 350 பேர் வரையில் கலந்து கொண்டனர்.(க-10)

## சேவைகளுக்கே பஸ் இல்லாத நிலையில் திருமணத்திற்கு வாடகைக்கு விடலாமா?

யாழ்ப்பாணம்,ஜூலை3

பயணிகளின் சேவைகளுக்கென போதிய பஸ்கள் இல்லாத வேளையில் திருமண வைபவங்கள், கல்விச் சுற்றுலா போன்றவற்றுக்கு வட பிராந்திய போக்குவரத்துச் சபையினால் பஸ்கள் வாடகைக்கு விடப்பட்டுவருகின்றன என்று குற்றச்சாட்டு தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்குடாநாட்டில் பஸ் சேவையை திருப்திகரமாக நடத்துவதற்கு போதிய பஸ்கள் இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. அதற்கமைய சில பாதைகளில் பஸ் சேவைகள் சீராக நடைபெறாத நிலையும் இருந்து வருகிறது.

பஸ் சேவைகள் சீரற்றிருக்கும் போது திருமண வைபவங்கள் கல்விச் சுற்றுலா போன்றவற்றுக்கு பஸ்களை வாடகைக்கு விடுவதோடு, அண்மைக் காலத்தில் புதிதாக வந்த சிறியரக பஸ்கள் கூட ரிக்கட் பரிசோதனைக் குழுவின் கடமைக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்றும் கூறப்படுகிறது. (க-173)

## பண்ணையில் ஷெல் வீழ்ந்து 17 பசு மாடுகள் உயிரிழப்பு!

### மூதூர் கூனித்தீவு கிராமத்தில் சம்பவம்

திருகோணமலை,ஜூலை3

திருகோணமலை மாவட்டம் மூதூர் கூனித்தீவு கிராமம் மீது கடந்த சனியன்று நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல் காரணமாக 17 பசுக்கள் உயிரிழந்தன; 45 பசுக்கள் கடுமையான காயங்களுக்கு இலக்காகின.

படையினர் ஏவிய ஷெல் ஒன்று பண்ணை ஒன்றினுள் வீழ்ந்து வெடித்ததாலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மூதூர் கிழக்கில் உள்ள நெய்மலைத் தீவுக்கும் - கூனித் தீவுக்கும் இடைப்பட்ட காட்டுப் பகுதியில் கடந்த சனியன்று படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாகவும் -

இதனையடுத்துப் படையினர் கூனித்தீவு கிராமம் மீது ஷெல் தாக்குதல் நடத்தியதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (க-7)

## தென்மராட்சி கல்வி வலயத்தில் ஆக்கத்திறன் கண்காட்சியில் பரிசுபெறும் மாணவர்கள்

தென்மராட்சி,ஜூலை3

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் இடையே நடத்தப்பட்ட புது யுகத்துக்கான வழிகாட்டல் ஆக்கத்திறன் கண்காட்சியில் பரிசுபெற்ற மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் விவரங்கள் வலயக் கல்வி அலுவலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளன.

**ஆரம்பப் பிரிவு: தரம் 1 - 5வரை**

முதலாம் பரிசு: தி.ஜெகத் - சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை, இரண்டாம் பரிசு: ஜெ.கீர்த்திகா - தர்மக்கேணி அ.த.க.பாடசாலை, மூன்றாம் பரிசு: அ.கௌசிகா - மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம்.

ஆசிரியருக்கான பரிசு:

திருமதி அ.நவரத்தினராசா - வரணி மகா வித்தியாலயம்.

**மத்திய பிரிவு: தரம் 6 - 9வரை**

முதலாம் பரிசு: மு.சந்திரபோஸ் - அல்லாரை அ.த.க.பாடசாலை, இரண்டாம் பரிசு: ரி.நிரோனி - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மூன்றாம் பரிசு: சி.பத்மஜா - மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்.

ஆசிரியர்களுக்கான பரிசு:

திருமதி வி.வைகுந்தநாதன் - முகாவில் அ.த.க.பாடசாலை., திருமதி இ.ஜெயசிங்கம் - சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

**மேற் பிரிவு: தரம் 10 - 13 வரை**

முதலாம் பரிசு: கா.பகீரதன் - வரணி ம.வி., இரண்டாம் பரிசு: ப.பாலமுருகன் - மீசாலை வீரசிங்கம் ம.வி., மூன்றாம் பரிசு: த.ஆனந்தபாபு - சாவ.இந்துக் கல்லூரி.

பரிசில் பெற்ற மாணவர்கள், ஆசிரியர்களுக்கான சான்றிதழ்கள் விரைவில் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-117)

### நாளை

ஆனி 20
புதன்கிழமை
திதி: சதுர்த்தசி
முன் இரவு 7.53 வரை.
நட்சத்திரம்: கேட்டை
காலை 7.21 வரை.
சுபநேரம் : 4.27 - 5.57
ராகுகாலம் : 11.57 - 1.27
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

எப்படிப் பேசுவது என்பதை அறிவது எளிது; எப்படி மௌனமாய் இருப்பது என்பதை அறிவது கடினம்.

## பாடசாலைகளில் சுகாதாரத் திரைப்படம்

அச்சுவேலிப் பகுதிப் பாடசாலைகள் தோறும் சுகாதாரம் தொடர்பான திரைப்படங்கள் காண்பிக்கப்பட்டு வருகின்றன.

போஷாக்கின் அவசியம், மலேரியா நோய், புழு நோய்கள், உளவியல் விவரணப் படங்கள் உள்ளிட்ட திரைப்படங்கள் பாடசாலைகள் தோறும் திரையிடப்பட்டு வருகின்றன.(க-11)

## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



கால் பந்தாட்டத்தில் 'ஹீரோ'
எனப் பெயரெடுத்த கந்தப்பு
அண்ணை மகன் கதை
என்னாச்சு சொல்லு மச்சான்.
கட்டறுத்த நாம்பன் மாட்டை
துரத்திப் பிடிக்கையிலே
மிதிவெடியில் கால்பட்டு
வலது கால் போயாச்சு பாவம்!

## புலமைப்பரிசில் பயிற்சிப் பரீட்சை - 2001
## மாதிரி வினாத்தாள் இல. - 2


### பகுதி 1


தரம் 5 நேரம்:- 45 நிமிடம்


★ **1-5 வரையுள்ள வினாக்களில் ஒவ்வொன்றிலும் ஐந்து சொற்கள் உள்ளன. இச்சொற்களைக் குறித்த ஒரு வரிசையில் ஒழுங்கு படுத்தும்போது நடுவில் வரக்கூடிய சொல்லை அடைப்புக்குறியில் உள்ள புள்ளிக் கோட்டில் எழுதுக.**

1. விதை, காய், பழம், பூ, மொட்டு (.............)
2. எழுத்து, வாக்கியம், சொல், பந்தி, கட்டுரை (.............)
3. செவ்வாய், வெள்ளி, திங்கள், வியாழன், புதன் (.............)
4. அன்பு, ஆ, ஆலை, அம்புலி, அம்புயம் (.............)
5. Cat, Ant, Dog, Bat, Eat (.............)

★ **6-8வரையுள்ள வினாக்களில் முதல் வரையப்பட்ட படங்களின் கோலத்தை அவதானித்து அடுத்து வரவேண்டிய படத்தின் கீழ்க் கோடிடுக.**

6.


7.


8.


★ **கீழ்வரும் சட்டகத்தை அவதானித்து சரியான விடையின் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| கடிதம் | | புத்தகம் | கல் |
| மூடி | பேனை | | பந்து |
| ஆணி | | பென்சில் | பலூன் |
| ஊசி | தொப்பி | அப்பிள் | |
| | இனிப்பு | | பூ |


9. கீழிருந்து மூன்றாவது வரிசையில் இடமிருந்து வலமாக நான்காவது சதுரத்தில் உள்ள பொருள் யாது?
(1) பென்சில் (2) பலூன்
(3) பந்து (4) ஆணி (.............)

10. மேலிருந்து நான்காவது வரிசையில் இடமிருந்து வலமாக மூன்றாவது சதுரத்தில் உள்ள பொருள் யாது?
(1) ஊசி (2) தொப்பி
(3) அப்பிள் (4) பலூன் (.............)

11. மேலிருந்து மூன்றாவது வரிசையில் வலமிருந்து இடமாக நான்காவது சதுரத்தில் உள்ள பொருள் யாது?
(1) ஆணி (2) பென்சில்
(3) பலூன் (4) பூ (.............)

★ **கீழ்வரும் வினாக்கள் ஒவ்வொன்றினதும் விடைகளைக் குறிக்கும் ஆங்கில எழுத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**


12. உங்களுக்கு இந்த அம்புக்குறி வழியாகவும், அம்புக்குறி குறிக்கும் திசை வழியாகவும் பயணம் செல்ல முடியுமாயின் P இலிருந்து Q வுக்கு எத்தனை வித்தியாசமான முறைகளில் செல்லலாம்?




(A) 5 (B) 6 (C) 7 (D) 8 (.............)


13.


இவ்வடிவக் கோலத்தின் அடுத்த நான்கு வடிவங்களும் எவை?





(.............)

14. அமுறனுக்கு 10kg அரிசி தேவைப்படுகிறது பின்வருவனவற்றுள் எதனை அவன் வாங்குதல் வேண்டும்?




(.............)

15. தரப்பட்ட சதுரத்தை இரு துண்டுகளாக வெட்டி அத்துண்டுகளை அசைத்து ஒரு செவ்வகத்தை அமைத்தால் அதன் வடிவம் எவ்வாறு இருக்கும்?







(.............)

16. எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட சதுரமுகி ஒன்றின் இரு நிலைகள் கீழே தரப்பட்டுள்ளன.

இதில் "க" என்ற எழுத்துள்ள பக்கத்திற்கு எதிரான பக்கத்தில் உள்ள எழுத்து யாது?
(A) ப (B) வ
(C) ம (D) ச




(.............)


★ **சரியான விடையின் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

17. சிறுவர்கள் தொலைக்காட்சியில் காட்டூன் படங்களையே அதிகம் பார்த்து இரசிக்கின்றார்கள். இதற்குக் காரணம்?
(1) காட்டூன் படத்தின் மீதுள்ள விருப்பமாக இருக்கலாம்.
(2) பார்ப்பதற்கு வேறு படங்கள் இல்லாமையாக இருக்கலாம். (.............)

18. வழமைக்கு மாறாக அதிகமான பிரயாணிகள் பஸ் நிலையத்தில் நிற்கின்றார்கள். இதற்கு காரணம்?
(1) சுற்றுலாக் காலமாக இருக்கலாம்.
(2) நீண்ட நேரமாக பஸ் நிலையத்தில் பஸ்கள் வராமை. (.............)

19. ஏதேனும் வைபவம் ஒன்றின் போது முதலில் வரவேற்புரையும், கடைசியில் நன்றியுரையும் வழங்கப்படுகின்றன. இதற்குக் காரணம்?
(1) ஒவ்வொரு வைபவத்திலும் அது வழக்கம் என்பதால்.
(2) பிரதம அதிதிகளை மகிழ்ச்சிப் படுத்துவதற்காக. (.............)

★ **அச்சகம் ஒன்றில் குறித்த ஆண்டில் அச்சிடப்பட்ட புத்தகங்களின் விவரத்தை படவரைபு காட்டுகிறது. ஒரு வட்டம் 100 புத்தகங்களைக் குறிக்கின்றது.**




**படவரைபு விளக்கம்:- மிக அதிகமாக அச்சிடப்பட்ட புத்தகம் சிறுவர் கதைகள் ஆகும். மிகக் குறைவாக அச்சிடப்பட்ட புத்தகங்கள் நாவல்கள் ஆகும். விஞ்ஞானம், கவிதைப் புத்தகம் இவை இரண்டும் சம அளவானவை. நாவல்களை விட 50 புத்தகங்கள் கூடுதலாக வரலாறு புத்தகங்கள் அச்சிடப்பட்டன. இவற்றோடு அழகியல் புத்தகமும் அச்சிடப்பட்டது.**

**இவற்றை அடிப்படையாக வைத்து பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

20. வரலாற்றுப் புத்தகங்கள் எத்தனை அச்சிடப்பட்டன?
(1) 300 (2) 350 (3) 450 (4) 500

21. சிறுவர்கதைப் புத்தகமும், விஞ்ஞானப் புத்தகமும் சேர்த்து எத்தனை புத்தகங்கள் அச்சிடப்பட்டன?
(1) 500 (2) 700 (3) 950 (4) 1000

22. எந்த இரண்டு வகை புத்தகங்களைச் சேர்த்தால் 650 புத்தகங்கள் அச்சிடப்பட்டிருக்கும்?
(1) சிறுவர்கதை, நாவல். (2) விஞ்ஞானம், கவிதை
(3) வரலாறு, நாவல் (4) நாவல், அழகியல்


★ **கீழே உள்ள ஒவ்வொரு வினாவிலும் மிகப் பொருத்தமான விடையின் எழுத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

23. ஒரு வீட்டில் எப்போதும் இருப்பது
(அ) கூரை (ஆ) தளபாடம்
(இ) யன்னல் (ஈ) சுவர்கள் (.............)

24. ஒரு கடையில் எப்போதும் இருப்பது
(அ) தட்டுக்கள் (ஆ) தராசுகள்
(இ) பொருள்கள் (ஈ) பணம் (.............)

25. மகள் எப்போதும் தாயிலும் ------------ குறைந்தவளாக இருப்பாள்.
(அ) அறிவு (ஆ) பலம்
(இ) உயரம் (ஈ) வயது (.............)

**26-30 வரையுள்ள வினாக்களில் தரப்பட்ட சொல் ஒவ்வொன்றுக்குமான இரகசியக் குறியீட்டை நிரலில் இருந்து தெரிவுசெய்து அதற்குரிய உரோமன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**




26. குந்தகம் (................)
27. சங்கரன் (................)
28. வசந்தன் (................)
29. சங்கமம் (................)
30. பங்கயம் (................)


★ **கீழ்வரும் வினாக்களைக் கவனமாக வாசித்து அதற்குரிய சரியான விடையின் கீழ்க்கோடிடுக.**

31. ஓர் ஆணைக் காட்டி மல்லிகா "அவர் எனது கணவரின் மனைவியின் மகளின் சகோதரர்" என்று கூறினாள். மல்லிகாவுக்கும் மேற்படி ஆணுக்கும் இடையிலான தொடர்பு யாது?
(1) தாய் - தந்தை (2) கணவன் - மனைவி
(3) தாய் - மகன் (4) மாமி - மருமகன்.

32. கொழும்பு இந்துக் கல்லூரி பொன்விழாவைக் கொண்டாடியது. பொன்விழா நிறைவினைக் குறிக்கும் ஆண்டுகளின் எண்ணிக்கையைத் தரும் விடையினை உரோமன் இலக்கத்தில் காட்டுவது
(1) LXXV (2) XXV (3) LX (4) L

33. இரண்டு எண்களின் கூட்டுத்தொகை 30. அவற்றுக்கிடையிலான வித்தியாசம் 8. அவ்விரு எண்களும் எவை?
(1) 20,10 (2) 18, 12 (3) 19,11 (4) 20,12

★ **கீழ்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள படத்தோடு தொடர்பு இல்லாத சொற்றொடரின் கீழ்க் கீறிடுக.**



34. (1) பணம் உழைத்தல்.
(2) சமநிலையைப் பேணுதல்.
(3) பொருள்களை நிறுத்தல்.

35. (1) பயிர்கள் செழிப்படையும்.
(2) வெள்ளப்பெருக்கு ஏற்படும்.
(3) நீர்ப்பற்றாக்குறை ஏற்படும்.

★ **கீழ்வரும் வினாக்களில் தடித்த**
**தைத் தரும் சொல்லின் கீழ்க்**

36. தொலைக்காட்சியில் **புதினங்க**
(1) புதுமைகளை (2) செ
37. பசுக்கள் கூட்டங்கூட்டமாகத்
(1) குளத்தில் (2) அ
38. கள்வரின் திருட்டை **வர்த்தக**
(1) உறவினர்கள் (2) ம
39. மக்கள் அரசன் **ஆணைபபடி**
(1) ஆட்சி (2) க
40. இராமன் தன் **கண்களை** நன்
(1) விலிகளை (2) வி

### பகுதி

★ **பின்வரும் பாடலை வாசித்து**
**விடை எழுதுக.**

அம்மா நான் விளையாடப் போ
அன்புடன் பட்சணம் தந்தனுப்
சும்மா நான் உட்கார மாட்டே
தோழர் அழைக்கின்றார் நாழி

பூப்பறித்தாடுவோம் கொஞ்சம்
பூசை செய்தாடுவோம் பூரதம்
வேப்ப மரத்தடி மண்ணில் -
வீடுகள் கட்டி விருந்துகள் செ

1. அம்மாவிடம் சிறுவன் எதைத்
..............................
2. பூசை செய்வதற்காக என்ன
றது? ..............................
3. வேப்ப மரத்தடி மண்ணில் என்ன
..............................
4. இப்பாடல் யார் யாரைப் பார்த்து
..............................
5. தோழர்கள் எப்படிப்பட்டவர்கள்
..............................

★ **ஒத்த கருத்துள்ள சொல் எழு**
6. பூ - .............................. 7.

★ **எதிர்க் கருத்துள்ள சொல் எழு**
8. அன்பு - .............................. 9.

★ **பிரித்தெழுதுக.**
10. தந்தனுப்பு - ..............................


★ **பன்மைச் சொல் எழுதுக.**
11. நான் - .............................. 12.
13. பாடலில் உள்ள உயர்திணை
துக. ..............................
14. பாடலில் உள்ள அஃறிணை
துக. ..............................
15. "போறேன்" என்பது பேச்சு வ
யான (திருத்தமான) சொல்

★ **பின்வரும் தமிழ்ச் சொற்களின்**
16. கை - ..............................
18. வீடுகள் - ..............................

★ **பின்வரும் விடைகளைப் பயன்ப**
**ளுக்கு விடை எழுதுக.**
தாளவாத்தியங்கள், பாட்டுவாத்
பல்லியம், வாத்திய இசை

20. கிராமிய வாழ்வை விளக்கும்
21. மிருதங்கம், தபேலா, உடுக்கு
22. புல்லாங்குழல், ஆர்மோனியம்,
23. பல வாத்தியங்களை இணை
24. இசைக் கருவிகளால் இசைக்

★ **கீழே A,B,C,D,E எனும்**
**இவ்வுபகரணங்களின் பயன்பா**
**ளுக்கு நேரே உரிய எழுத்தைப்**





25. திரவங்களின் கன அளவை
26. மின்குமிழ் ஒன்றை ஒளிரச் செ
27. சூழல் வெப்பநிலையை அள
28. வேலை ஒன்றை இலகுவாகச்
29. வெப்பத்தினால் கம்பி விரிவ

ம்.

டும்.

ம்.



டித்த சொல்லின் மிகச் சரியான கருத்
ழ்க் கீறிடுக.
ஙங்களை உடனுக்குடன் அறியலாம்.
2) செய்திகளை (3) படங்களை.
ாகத் தடாகத்தில நீர் பருகின.
2) ஆற்றில் (3) ஓடையில்
த்தகர்கள் கண்டித்தார்கள்.
2) மக்கள் (3) வியாபாரிகள்
படி நடந்தனர்.
2) கட்டளை (3) விருப்பம்
நன்றாக மூடினான்.
2) விளிகளை (3) விழிகளை

பகுதி 2

நேரம்:- 1மணி 15 நிமிடம்

ந்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு

ப் போறேன் - கையில்
தனுப்பென்னை
ாட்டேன் - நல்ல
நாழிகையாச்சு.

ஞ்சம் - சாமி
ரதம் கட்டி
ல் - சிறு
ள் செய்வோம்.

தைத் தருமாறு கேட்கின்றான்?
..................................................
ன்ன என்ன செய்வதாகக் கூறப்படுகி
..................................................
..................................................
என்ன செய்வதாகக் கூறப்படுகிறது?
..................................................
பார்த்துப் பாடுவதாக அமைந்துள்ளது
..................................................
வர்கள்? ........................................
..................................................
ல் எழுதுக.
7. பட்சணம் -..............................
எழுதுக.
9. தோழர் - ..............................
..................................................
12. அம்மா - ..............................
ிணை பெண்பால் சொல் ஒன்று எழு
..................................................
ணை பலவின்பால் சொல் ஒன்று எழு
..................................................
சு வழக்கு மொழியாகும். இதன் சரி
ால்லை எழுதுக. ..............................
ரின் ஆங்கிலச் சொற்களை எழுதுக.
... 17. நான் - ..............................
... 19. மரம் - ..............................
பன்படுத்தி அதன் கீழுள்ள வினாக்க

டுவாத்தியங்கள், கிராமியப்பாடல்கள்,
சை
க்கும் பாடல்கள் ..............................
டுக்கு ..............................
ரியம், வயலின் ..............................
ணைத்து வாசித்தல் ..............................
சைக்கப்படுவது ..............................
ரணங்கள் காட்டப்பட்டுள்ளன.
ன்பாடுகளைக் குறிக்கும் வசனங்க
தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.




வை அளத்தல். ..............................
ரச் செய்தல். ..............................
அளத்தல். ..............................
ாகச் செய்தல். ..............................
ிரிவடைதல். ..............................

★ ஆரம்ப விஞ்ஞானச் செயற்பாடு ஒன்றில் எரிதலுக்கும் வளிக்கும் இடையிலே உள்ள தொடர்பைக் கண்டறிவதற்குரிய பரிசோதனையை மேற்கொள்வதற்காகத் தரம் 5 மாணவர்களிடம் ஒவ்வொருவரும் இரண்டு மெழுகுவர்த்திகளும் ஒரு வெற்று ஜாம் போத்தலும் கொண்டு வருமாறு ஆசிரியர் கூறினார். 40 பிள்ளைகள் உள்ள அந்த வகுப்பிலே 3/4 பங்கினர் மட்டுமே ஆசிரியர் கூறியபடி பொருள்களைக் கொண்டு வந்தனர். ஏனையோரில் 5 பேர் மெழுகுதிரி ஒவ்வொன்று மட்டும் கொண்டு வந்தனர். மற்றையோர் ஒரு பொருளையேனும் கொண்டு வரவில்லை. இதன்படி கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

30. எத்தனை பேர் ஆசிரியர் கூறிய இருவகைப் பொருள்களையும் கொண்டு வந்தனர்? ..............................
31. ஒரு பொருளையேனும் கொண்டு வராதோர் எத்தனை பேர்?
..............................
32. மெழுகுதிரி மட்டும் கொண்டு வந்தோர் எத்தனை பேர்?
..............................
33. மொத்தமாக எத்தனை மெழுகுவர்த்திகள் வகுப்பிற்குக் கொண்டு வரப்பட்டன? ..............................
34. ஒரு மெழுகுதிரியின் விலை 2 ரூபாவானால் மாணவர்களால் கொண்டுவரப்பட்ட மெழுகுவர்த்திகளின் மொத்தப் பெறுமதி எவ்வளவு? ..............................
35. அந்த வகுப்பில் படிக்கும் கம்சன் எனும் மாணவன் இரு மெழுகுவர்த்திகளை வாங்குவதற்காக 4 ரூபாவினைச் சில்லறையாக 5 குற்றிகள் கொடுத்தான். அவன் கொடுத்த குற்றி நாணயங்களை வெற்றிடத்தில் எழுதுக.

4 ரூபா = ( ) + ( ) + ( ) + ( ) + ( )

★ அவ்வகுப்பு மாணவர்கள் செய்த பரிசோதனை அமைப்பைப் படம் காட்டுகின்றது.



36. சிறிய நேரத்தின் பின்பு இவ்வமைப்பின்படி மெழுகுதிரியில் என்ன மாற்றத்தை அவதானிப்பீர்?
..............................
..............................

37. எரிதலுக்கு உதவும் வாயு எது? ..............................
38. எரியும் மெழுகுதிரியில் வெளிவரும் இரு சக்திகளையும் எழுதுக. ..............................
39. மெழுகுதிரி இயற்கை ஒளி முதலா? செயற்கை ஒளி முதலா?
..............................

★ கீழ்வரும் வினாக்களில் உள்ள விடைகள் உரோமன் எண்ணில் தரப்பட்டுள்ளன. அவற்றில் சரியான விடையின் கீழக் கீறிடுக.

40. இலங்கையில் உள்ள மாகாணங்களின் எண்ணிக்கை.
(X. VIII, IX, XXV)
41. சூரிய ஒளியில் உள்ள நிறங்கள் எத்தனை?
(VI, VII, VIII, XV)
42. ஒரு நாளில் உள்ள மணித்தியாலங்கள்
(XVI, XII, XXIV, XXVI)

★ கீழ்வருவனவற்றால் பரப்பப்படும் / பரவும் பிரதான ஒரு நோயினை எழுதுக.

43. நீர் - .............................. 44. ஈக்கள் - ..............................
45. நாய் - .............................. 46. நுளம்பு - ..............................
47. எலி - ..............................

★ உருவில் உள்ளவாறு உருளும் வண்டியொன்றைச் செய்வதற்குத் தேவையான பிரதான ஆறு பொருள்களும் எவை என்பதைத் தரப்பட்ட பொருள் கூட்டத்தில் இருந்து தெரிவு செய்து எழுதுக.



ஆணி, நூற்கட்டை, காட்போட், கயிறு, கம்பித்துண்டு, போத்தல், தகர மூடி, மரக்கட்டை, தடி, வெற்றுப்பேணி.

48.
1. .............................. 2. ..............................
3. .............................. 4. ..............................
5. .............................. 6. ..............................

★ பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

49. மஞ்சள் நிறத்தையும் நீல நிறத்தையும் சேர்க்கும் போது உண்டாகும் புதிய நிறம். ..............................
50. ஒருவர் தன்னைப் பற்றித் தானே எழுதுவது. ..............................
51. நீரைச் சுத்திகரிக்கும் இரசாயனப் பொருள் எது? ..............................
52. சூரிய ஒளியில் உள்ள விற்றமின் எது? ..............................
53. "கூ.மொ.வி.நி." எனும் சுருக்கக் குறியீட்டின் விரிவை எழுதுக.
..............................

★ கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் சரியாயின் ✓ அடையாளத்தையும் பிழையாயின் ✗ அடையாளத்தையும் எதிரே உள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

54. உளி, சுத்தியல் கொண்டு கல்லில் சிலை செதுக்கலாம். ( )
55. போலியோ இலங்கைக்கு மட்டும் உரித்தான நோய் ஆகும். ( )
56. துளசி மருந்தாகப் பயன்படும் தாவரமாகும். ( )
57. லீப் வருடத்தில் 366 நாள்கள் இருக்கும். ( )
58. இலங்கையில் மலைக்குகை ஓவியம் குமண மலையில் உண்டு. ( )

தயாரிப்பு:
திரு. வே. அன்பழகன் (ஆசிரியர்)
(யா/மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை,
யா/ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி, புத்தூர்.)

★ கீழ்வரும் கடிதத்தினை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

'அன்பகம்'
வளர்மதி வீதி□
மட்டுவில் தெற்கு□
சாவகச்சேரி□
20.05.2001

அன்புள்ள அப்பா,
நான் நல்ல சுகமாக இருக்கிறேன். அதுபோல் உங்கள் சுகத்தை அறிய ஆவலக உள்ளேன். அப்பா, நான் நன்றாகப் படிக்கின்றேன். ஒழுங்காகப் பாடசாலைக்குச் சென்று வருகின்றேன். தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெறுவேன் என்ற நம்பிக்கை எனக்குண்டு. அப்பா, நான் பரீட்சையில் சித்தியடைந்தால், எனக்கு - துவிச்சக்கர வண்டி ஒன்று வாங்கித் தரவேண்டும். பரீட்சை நெருங்கிவிட்டதால் அதிகம் எழுதமுடியவில்லை. பரீட்சை முடிந்ததும் நீண்ட கடிதம் எழுதுகின்றேன்.

இப்படிக்கு□
அன்பு மகன்□
பா. அருணிகன்□

59. இக்கடிதத்தை எழுதியவரின் தந்தை பெயர் பின்வருவனவற்றுள் எதுவாக இருக்கும்?
அப்பாத்துரை, பாலவாசன், அருணாச்சலம்
60. சதுரப் பெட்டிகள் இட்ட இடத்தில் வர வேண்டிய குறியீடுகளை கடிதத்தில் அப்பெட்டிகளினுள் குறிக்க.

★ பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ப் பதத்தைக் கடிதத்தில் இருந்து எழுதுக.


61. Grade - .............................. 62. Letter - ..............................
63. School - .............................. 64. Father - ..............................

★ கீழ்வரும் குறியீடுகள் குறிக்கும் சொற்களை / சொற்றொடர்களைத் தெரிந்து அவற்றிற்குக் கீழே எழுதுக.

நஞ்சு, வைத்தியசாலை, முன்னால் பாதசாரிகள் கடவை, முன்னால் சிறுவர் கடவை, ஒலி எழுப்பத்தடை

65. 
66. 

.............................. ..............................

67. 
68. 

.............................. ..............................

★ பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

69. 1kg தேயிலை ரூபா 80.00 ஆகும். 250g தேயிலையின் விலை யாது? ..............................
70. 1லீற்றர் தேங்காயெண்ணெயின் விலை ரூபா 30.00 ஆகும். 400ml தேங்காயெண்ணெயின் விலை யாது? ..............................
71. 75ரூபா 5 பிள்ளைகளுக்கிடையே சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டது. அவர்களில் 4 பிள்ளைகளுக்குக் கிடைத்த மொத்தப் பணம் எவ்வளவு? ..............................
72. 18 முட்டைகளின் விலை 45 ரூபா ஆகும். 6 முட்டைகளின் விலை யாது? ..............................
73. 2 கொய்யாப்பழங்களின் விலை ஒரு மாம்பழத்தின் விலைக்குச் சமனாகும். 4 கொய்யாப்பழங்களினதும் 2 மாம்பழங்களினதும் விலை 24 ரூபா எனின் ஒரு கொய்யாப்பழம் என்ன விலை?
..............................
74. ஒரு மீற்றர் 35 ரூபா வீதம் 25 மீற்றர் துணியின் விலை யாது? ..............................

★ "நான் பார்த்து இரசித்த கடற்கரைக் காட்சி...." எனும் தலைப்பின் கீழ் சரியான எழுவாய் பயனிலைகளுடன் ஆறு வாக்கியங்கள் எழுதுக.

75. ------------------------------
------------------------------
76. ------------------------------
------------------------------
77 ------------------------------
------------------------------
78. ------------------------------
------------------------------
79. ------------------------------
------------------------------
80. ------------------------------
------------------------------

# பிற்போடப்பட்டுள்ளது

யா/புனித ஜோன் பொஸ்கோ
வித்தியாலயம்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

05.07.2001 வியாழக்கிழமை நடைபெறவிருந்த பொதுக் கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டு, எதிர்வரும் (22.07.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும் என்பதைச் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

(C/17278) - செயலாளர்.


## கள்ள மின்சாரம் எடுப்பதை தடுத்தவர் மீது தாக்குதல்

கோப்பாய்,ஜுலை3

கோப்பாய் மத்தியில் சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பெற முயன்றவரைத் தடுத்த வயோதிபர், சம்பந்தப்பட்ட இளைஞரால் தாக்கப்பட்டு படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் க.தர்மராசா (வயது 65) என்பவரே படுகாயமடைந்து கோப்பாய் மருத்துவமனையில் அனுமதிகப்பட்டு, அங்கிருந்து மேலதிகச் சிகிசசைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

இச்சம்பவம் குறித்து இப்பகுதிக் கிராம சேவையாளரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-7)

## பொதுநிர்வாக டிப்ளோமாவுக்கு 50 பேர் தெரிவு

யாழ்.பல்கலைக்கழக பொதுநிர்வாகப் பட்டப்பின் டிப்ளோமா கற்கை நெறிக்கு இவ்வருடம் 50 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளதாக உயர் பட்டப் பீடாதிபதி அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கடந்த வருடம் ஆங்கில மொழிமூலம் நடைபெற்ற மேற்படி பரீட்சையில் 34பேர் தோற்றியிருந்த போதிலும் 60 வீதமானவர்கள் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.


## பின்முற்றாகும் தீர்வை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

யோசேப் வோல்டன் டயஸ்
பெண் மேரி சசிகலா
முன்னர் சூசைதேவசகாயம் மகள்
மேரி சசிகலா
*இல. 10/1, நக்கா றோட்,*
*யாழ்ப்பாணம்.*

வழக்காளி

வழ.இல.ம.நீ/223 எதிர்

யோசேப் வோல்டன் டயஸ்
*இல. 3, குருசோல்ட் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

எதிராளி

இவ்வழக்கு யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் 2001ஆம ஆண்டு வைகாசி மாதம் 29ஆம் திகதி பதில் மாவட்ட நீதிபதி திரு. மு.திருநாவுக்கரசு அவர்கள முன்னிலையில் வழக்காளியும், அவரின் பதிவுபெற்ற சட்டத்தரணி திருமதி ச.இளங்கோவனும் சமுகமாயிருக்க எதிராளிக்கு பிஸ்கால் மூலம அழைப்புக்கட்டளை அவரின் வசிப்பிடத்துக்கு அனுப்பப்பட்டு அவர் வெளிநாடு சென்றுள்ளமையால் அழைப்புக்கட்டளை சேவிக்கப்படாமல் வலம்புரிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு எதிராளி சமுகமளிக்காததால் ஒருமுக விளக்கத்திற்கு நியமிக்கப்பட்டு வழக்காளியின் சாட்சியத்தையும், ஆவணத்தையும் பரிசீலித்து வழக்காளிக்கும், எதிராளிக்கும்28-08-1991 ஆம் திகதி பதியப்பட்ட திருமணத்தை வழக்காளியை எதிராளி வேண்டுமென்றும், வன்மமாகவும் கைவிட்ட காரணத்துக்காக ரத்துச்செய்து வெற்றும் வெறிதுமானதெனக் கட்டளையிட்டு இப்பின்முற்றாகும் தீர்வை வழங்கப்படுகிறது.

வழக்காளி இனிமேல் கன்னிப் பெண்களுக்குரிய சகல உரிமைகளையும் அனுபவிககலாமென்றும் மேலும் இப்பின்முற்றாகும் தீர்வை பற்றிய அறிவித்தல் உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு மூன்று மாதங்களில் இப்பின்முற்றாகும் தீர்வை முற்றானதாக்கப்படும் என்றும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

(ஒப்பம்) மு.திருநாவுக்கரசு,
பதில் மாவட்ட நீதிபதி,
மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் 2001-05-29
வரைவு:
ச.இளங்கோவன்,
வழக்காளிச் சட்டத்தரணி.

மன்றின்கட்டளைப்படி,
ச.வன்னியசிங்கன்,
பதில் பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம். 21-06-2001

(89676)



# மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம்

We Serve

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின்
அனுசரணையுடன் நடத்தும்
விழிவெண்படலத்தால் (கற்றாக்) பாதிப்புற்றோருக்கான

## - இலவச கண்பரிசோதனை முகாம் -

காலம் : 05-07-2001 (வியாழன் போயாதினம்) காலை 8.00 மணி.
இடம் : சங்கானை ப.நோ.கூ.சங்க பிரதான காரியாலயம்.

கண்பரிசோதனை மேற்கொள்பவர்:
யாழ்.போதனா வைத்தியசாலை - கண்சத்திரசிகிச்சை நிபுணர்
வைத்திய காலாநிதி S.குகதாசன் அவர்கள்

முகாமுக்கு வருகை தரும் ஒழுங்கின்படி பரிசோதனை மேற்கொள்ளப்படும். யாழ்.போதனா வைத்தியசாலையில் கண்சத்திரசிகிச்சையை மேற்கொள்வதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

குறிப்பு: சுழிபுரம், சித்தன்கேணி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு, சண்டிலிப்பாய், வட்டுக்கோட்டை, சங்கானைப் பகுதிகளில் வாழும் நலிவுற்ற முதியோரைப் பயன்பெற வேண்டுகிறோம்.

இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

லயன் S.S.தங்கராஜா
சேவைத்திட்டத் தலைவர்.

(C/17277)

லயன் வைத்திய கலாநிதி
நவமலர் கனகரெத்தினம்
கழகத் தலைவர்.



# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

பாசமுடன் அலறுவது உங்களுக்குக் கேட்கலையோ.....?

*வாழ்வில் ஒளியேற்றி வைத்தவரே – உலகில்*
*வாழ்க்கையிது வென்று வாழ்ந்து காட்டியவரே!*
*கள்ளமிலா உள்ளத்துடன் வாழ்ந்தவரே!*
*எமது உள்ளத்தில் நீங்கா இடம்பிடித்தவரே!*

*நோயகற்றி மக்களது நேசமதை மீட்டவரே!*
*தேசமதில் கீர்த்தியுடன் வாழ்ந்தொளிர்ந்த மன்னவரே!*
*பாசமதைப் பண்புடனே என் மனதில் விதைத்தவரே!*
*பாசக்கயிற்றின் பிடியதனுள் பணிந்துதான் சென்றீர்களோ....?*

*அகரம் முதல் கொண்டு அனைத்துமறிய வைத்தவரே!*
*சிகரம் என குணத்தில் சிறந்திருந்த அற்புதனே!*
*லகரம் மட்டும் வாழ்க்கையில்லை யென உணர்த்தி நின்றவரே!*
*உகரமான உலகத்தின் மண்ணைவிட்டுச் சென்றீர்களோ....?*

*பாசமுடன் அலறுவது உங்களுக்குக் கேட்கலையோ....?*
*இப்போதே ஓடிவந்து இன்முகத்தைக் காட்டுங்களேன்!*
*எப்போதும் என்மனதில் தெய்வமென இருப்பவரே!*
*ஆறாத் துயரத்திலே எம்மை ஆழ்த்திவிட்டதேனப்பா....?*



அமரர் வைத்திய கலாநிதி
LION Dr.த.அருமைத்துரை
(RMO)
(பொறுப்பதிகாரி, அரசினர் மத்திய மருந்தகமும், மகப்பேற்று நிலையமும் - நவாலி).

ஜனனம் 17- 09-1941
அஸ்தமனம் 03-06-2001

03.06.2001 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வு இன்று (03-07-2001) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். தனிப்பட்ட அழைப்பிதழ் கிடைக்கப் பெறாதவர்கள் தயவுசெய்து இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

*மதவடி லேன்,*
*சுதுமலை வடக்கு,*
*மானிப்பாய்.*

இவரின் பிரிவாற்றாமையால் வாடும்:
குடும்பத்தினர்.

(89673)

# ஜனத்துக்காக ஒரு துளி கண்ணீர்!

பல வருடங்களாக சூறாவளி போல ஒரு யுத்தம் தனது கொடூர கரத்தில் நம் நாட்டு மக்களை அழித்து வருகிறது. கடவுள் சமாதானத்தின் தேவன். 'ஐயோ' என்ற சத்தத்தை விரும்பமாட்டார். மனிதன் மதரீதியாகவும், அரசரீதியாகவும் சமாதானமாக வாழ்வது தெய்வசித்தம். கடவுள் மதத்துக்குரியவர் அல்லர். அவர் ஒரு பேரினவாதியும் அல்லர். கடவுள் ஏழைகளின் கண்ணீரைத் துடைத்து உண்ண ஆகாரமும், உடையும் கொடுப்பவர்; ஏழைகளின் கண்ணீரைத் துடைப்பவர்; நீதியை நிலைநாட்டுபவர். அக்குறிக்கோளின்படி நமது மண்ணின் விடுதலைக்காகக் கடவுளிடம் மன்றாடுகிறோம்.

***தெய்வகிருபையைப் பெற்றுக்கொள்ள***
***இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்! வாருங்கள்!!***
***தெய்வீக அருளைப் பெற்றுக்கொள்ளுங்கள்***
***இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!***

இடம் : செல்லமுத்து விளையாட்டு மைதானம், மானிப்பாய்.

காலம் : 2001 ஜூலை மாதம் 04ஆம் திகதி முதல் 08 ஆம் திகதி வரை. தினசரி பி.ப.3.00 மணி முதல் 6.00 மணி வரை.

செய்தி - **சகோ.செ.இராஜேந்திரம்** அவர்கள்
(விசேஷ தேவகிருபை வரம் பெற்றவர்)
- பிரவேசம் இலவசம் -



11 வருடமாக வாக்குக்கண் பார்வையிலும், 10 வருடமாக பீனிசத்திலும் கஷ்டப்பட்டவர் ஜெபத்தில் விடுதலை பெற்றார்.



10 வருடமாக அஸ்மாவினாலும், 7 வருடமாக மதுபோதைக்கு அடிமையாகவும், செய்வினைக் காரியத்திலுமிருந்து ஜெபத்தில் விடுதலை பெற்றார்.



ஊன்றுகோல் உதவியுடன் நடந்தவர் ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றார்.



18 வருடம் கூனியக்கட்டு, 11 வருட அஸ்மா நோயிலிருந்தும் ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றார்.



3 வருடமாக அடிவயிற்றில் வருத்தம். வைத்தியர் அடிவயிற்றில் கல் என்று கூறினார். இடுப்பு வலி வாந்தி எடுத்தல் இவற்றில் இருந்து ஜெபத்தில் சுகம் பெற்றார்.



2 சிறுநீரகமும் அழுகிய நிலையில் 13 வருடமாகக் கஷ்டப்பட்டவர். ஜெபத்தில் சுகத்தைப் பெற்றுக் கொண்டார்.



இருதயத்தில் துவாரம் 9 முறை அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. ஒரு சில வருடங்களில் மரிப்பதாகக் கூறப்பட்டது. ஜெபத்தில் மீட்புப் பெற்றார்.



15 வருடமாக முழங்கால் வருத்தத்தில் கஷ்டப்பட்டவர் ஜெபத்தில் விடுதலையைப் பெற்றுக்கொண்டார்.



14 வருட வயிற்றுவலி, 8மாதம் கைதூக்க முடியாதவர் ஜெபத்தில் விடுதலையைப் பெற்றுக்கொண்டார்.



15 வருடம் தலைவலியிலும், 15 வருடம் பீனிசத்திலும், 5 வருடம் இரத்தப் பெருக்கு நோயிலும், 12 வருடம் விரக்தியுற்ற வாழ்க்கையிலும் கஷ்டப்பட்டவர் ஜெபத்தின் மூலம் விடுதலைபெற்றார்.



4வருட மூலவியாதியிலும் அசுத்தாவியின் பிடியிலிருந்தும் ஜெபத்தில் விடுதலை பெற்றார்.



புற்று நோயின் நிமித்தம் எரிவு வேதனை ஜெபத்தில் விடுதலை பெற்றார்.



4வருடமாக மானசீகம் அசுத்தாவியின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றார்.



8 வருடமாக அசுத்தாவியினாலும், 6 மாத மாக அஸ்மாவினாலும் கஸ்ரப்பட்டவர் ஜெபத்தில் விடுதலையைப் பெற்றுக் கொண்டார்.



3 வருட அசுத்தாவிப் பிடியிலும், 3 வருட புற்றுநோய்க் கட்டியிலும் கஷ்டப்பட்டவர். ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றுக்கொண்டார்.



விபத்தில் கால் முறிந்து ஊன்று கோலின் உதவியோடு நடந்தவரும், 7 வருடத் தலைவலி, 4 வருட தொண்டை வலியில் இருந்தவரும் ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றார்.



3 வருட தேசிக்காய் அளவு கட்டி ஜெபத்தின் மூலம் மறைந்தது.



14 வருடமாகப் பிசாசின் பிடியிலும், 4 வருடமாக நெஞ்சடைப்பிலும், 28 வருடமாக கழுத்து வலியிலும், 6 மாதமாக காது வலியிலும் கஷ்டப்பட்டவர் ஜெபத்தில் சுகம் பெற்றார்.



பிறவியிலிருந்து அஸ்மாவிலும், 20 வருடமாக தொண்டையில் கட்டியிலும் கஷ்டப்பட்டவர் ஜெபத்தில் கட்டி நீங்கி சுகம் பெற்றார்.



பிறவியிலிருந்து இடுப்பு வருத்தம், 15 வயதில்தான் நடப்பார் என்று வைத்தியர் கூறினார். ஜெபத்தில் சுகம் பெற்றார்.

(89619)

# மரணங்களுக்குப் பின்னால் ....

1999ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி கிராம்புவில் பகுதியில் ஏற்பட்ட மோதலில் இரு படையினர் கொல்லப்பட்டனர். இதன் பின் பிற்பகல் 2 மணியளவில் சாவகச்சேரி டச்சு வீதியூடாக தென்னாபிரிக்கத் தயாரிப்பு பவள் கவசவாகனம் ஒன்று வேகமாகச் சென்றது. அதனுள் 19வயது இளைஞன் ஒருவன் தனக்கு அடுத்த கணம் என்ன நடக்கும் என்று தெரியாமல் ஏங்கியபடி இருந்தான். அவனது உடல் சித்திரவதையினால் பலத்த காயங்களுக்கும் உள்ளாகி இருந்தது. இரண்டு கைகளும் இரண்டு கால்களும் பலமான பொருளினால் தாக்கப்பட்டு முறிந்து காணப்பட்டன. இரு படையினர் கொல்லப்பட்ட இடத்தில் வைத்துப் பழிக்குப் பழியாக அவனைச் சுட்டுக்கொல்ல அந்தக் கவசவாகனத்தில் சென்ற இராணுவத்தினர் தீர்மானித்துவிட்டனர். சில நிமிடங்களில் துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டன. பிற்பகல் நான்கு மணியளவில் இராணுவத்தால் இரு சடலங்கள் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையின் சவக்சாலையில் போடப்படுகின்றன. (ரக்கில் எடுத்துவரப்பட்டு) சுமார் 50 வருடங்கள் பழைமை வாய்ந்த அந்தச் சவச்சாலையின் கதவுகள் பூட்டப்படுவதில்லை. இது இராணுவத்திற்குப் பாதகமாக அமைந்துவிட்டது. இராணுவத்தால் எதுவித அனுமதியுமின்றி இரு சடலங்கள் போடப்பட்டமை தொடர்பாக சாவகச்சேரி மாவட்ட நீதிபதிக்கும், சாவகச்சேரி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கும் அறிவிக்கப்பட்டது. மாவட்ட நீதிபதியின் உத்தரவிற்கு அமைய பிணப்பரிசோதனை நடத்தப்பட்டது.

இரண்டு சடலங்களில் ஒன்று இளைஞனுடையது. மற்றையது சுமார் 50வயது மதிக்கத்தக்கது. இரண்டு சடலங்களிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

இளைஞனின் சடலத்தில் இடது பக்க மண்டையோடு, மூளை என்பன முற்றாகச் சேதமடைந்து காணப்பட்டன. தலையின் இடதுபக்கம் முற்றாக அகற்றப்பட்டுக் காணப்பட்டது. இரண்டு மேற்புய என்புகளும் முறிந்து காணப்பட்டன. இரண்டு தொடை என்புகளும் முறிவடைந்து காணப்பட்டன. இவை அவ் இளைஞன் துப்பாக்கியால் சுட்டுக கொல்லப்பட முன் உள்ளாக்கப்பட்ட சித்திரவதைக்கு அடையாளமாக அமைந்தன. அவனது உடலில் துளைக்கப்பட்ட துப்பாக்கிச் சன்னங்கள் கொலையாளியின் மனவிகாரத்தை வெளிப்படுத்தியது.

வயது முதிர்ந்தவர் ஒருவர் எமது வைத்தியசாலைக்கு வந்தார். அவர் எமது வைத்தியசாலையில் அம்புலன்ஸ் சாரதியாக இருந்து ஓய்வு பெற்ற பாலசுந்தரம் ஆவார். அவர், தன் மகன் பாலசுந்தரம் தேவராசா (வயது 19) மீசாலையில் துவிச்சக்கர வண்டி திருத்தும் தொழில் புரிவதாகவும் தங்கள் குடும்பச் செலவுகளை மகனே உழைத்து உதவுவதாகவும் அன்று காலை இராணுவத்தினர் சிலராலும் இராணுவத்துடன் சேர்ந்து திரியும் கிருஸ்ணா என்பவராலும் விசாரணைக்கு என்று அழைத்துச் செல்லப்பட்ட மகன் இன்னும் வீடுவந்து




சேரவில்லை எனவும் கூறினார். மேலும் இளைஞன் ஒருவனின் சடலம இராணுவத்தால் வைத்தியசாலையில் போடப்பட்டதை ஏக்கத்துடன் கூறி அச்சடலத்தைப் பார்த்து அது தன்னுடைய மகனுடையது அல்ல என்ற உறுதியெடுக்கும் ஏக்கத்துடனும் என்னிடம் அனுமதி கோரினார்.

அத்தந்தையும் நானும் சவச்சாலைக்குச் சென்றபோது ஒரு கணம் ஏங்கிப் போனார். தான் அன்போடும் பாசத்தோடும் வளர்த்த மகனின் உடலில் பல காயங்கள், தலையில் அரைவாசிக்கு மேல இல்லை. தனது மகனின் அவலக்கோலத்தைத் தாயோ, உறவினரோ காணககூடாது என நினைத்துத் தலைக்கு மறைப்புச் செய்து உடலை எடுத்துச் செல்ல முடிவு செய்கிறார்.

மற்றைய உடலுக்கு உடனடியாக உரிமைகோர எவரும் வரவில்லை. அந்த வயோதிபர் பெருந்தெருக்கள் அபிவிருத்தி அதிகார சபையில் பொறியியலாளராகக் கடமைபுரிபவர். தமது கடமை முடிந்து வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தார். துப்பாக்கிச்சூடு நிகழ்ந்த இடத்திற்கு சைக்கிளில் சென்று கொண்டிருந்தார். வேம்பிராய்ச் சந்திக்கு அருகில் வந்துகொண்டிருந்தபோது இராணுவத்தால் இளைஞன் சுடப்பட்டதை நேரில் காண்கிறார். இராணுவமோ தமது இழி செயலுக்குச் சாட்சியா அமைந்து விடக்கூடாது என வந்தவரையும் துப்பாக்கிக்கு இரையாக்குகின்றது. இதனால் அவா தலையிலும் நெஞ்சிலும் வயிற்றிலும் காயமடைந்தார். அவரது பெயா சவரிமுத்து பேரின்பநாயகம் (வயது 52) இரண்டு பேரதும் உடலங்களுக்கும உரிய பிரேதப் பரிசோதனை நடத்தப்பட்டு, அறிக்கை சாவகச்சேரி மாவட்ட நீதிபதிகது அனுப்பப்பட்டது. 19 வயது பாலசுந்தரம் தேவராசாவின் இறப்பு சித்திரவதை செய்யப்பட்டு பின் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தால் மூளை, இதயம், பிரதான குருதிக்கலன்கள் சிதைவடைந்து ஏற்பட்டது என்றும், 52வயது சவரிமுத்து பேரின்பநாயகத்தின் இறப்பு துப்பாக்கிச் சூட்டுக் காயத்தினால் மூளையும், குருதிக்கலன்களும் சிதைவடைந்து அதிக இரத்தப்பெருக்கினால் ஏற்பட்டது என்றும் அறிக்கை கொடுக்கப்பட்டது.

ஆனால் சித்திரவதைக்குள்ளான பாலசுந்தரம் தேவராசாவைக் கைது செய்தது பற்றி விசாரிக்கவில்லை. இறந்த சடலங்கள் உடனடியாக ஸ்தலத்தி இருந்து நீதிபதியின் அ[illegible]தியின்றி அகற்றப்பட்டமை பற்றி [illegible]ரிக்கப்படவில்லை. மக்கள் அ[illegible]னால் சாட்சி சொல்ல முன்வரவி[illegible]

இச்சம்பவம்பற்றிப் புனையப்பட்ட அதாவது பயங்கரவாதிகளுடனான மோதலில் இறந்ததாக அவசரகாலச் சட்டத்தின் கீழோ, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழோ இச்சம்பவம் தள்ளுபடி செய்யப்பட்டது. குற்றவாளிகள் விசாரிக்கப்படவுமில்லை; கண்டுபிடிக்கப்படவுமில்லை; தண்டிக்கப்படவுமில்லை;

**டாக்டர் சி.யமுனானந்தா**

மருத்துவர்கள் பிரேதபரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பித்தது மரணத்துக்கான காரணத்தை அறிவதற்கு மட்டுமன்றி, இனிமேலும் அந்த வகையான இறப்புக்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்குமாகும். அந்த வகையில் இந்த இரு படுகொலைகள் போன்று இனிமேலும் தொடர்வதைத் தவிர்க்க இக்கொலைகளின் விவரம் உதவவேண்டும். ★

## அதிகாரி நாளை காங்கேசன் செல்கிறார்

காங்கேசன் கைதிகள் தடுப்பு முகாமுக்கு நாளை புதன்கிழமை சென்று அங்குள்ள கைதிகளைப் பார்வையிடவுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக அதிகாரி என்.ஜீவேஸ்வரா உணவு மற்றும் கடிதங்களையும் அவர்களிடம் கையளிப்பார்.

உறவினர்கள் நாளை புதன் கிழமை காலை உணவு மற்றும் கடிதங்களைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு அவர் தெரிவித்துள்ளார். (க-10)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜுலை3

வேலையற்ற உடற்கல்வி டிபளோமாதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல் இன்று செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு உடற கல்வி விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் அனைத்து மாணவர்களையும் இதில் கலந்துகொள்ளுமாறு அதன் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார். (க-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜுலை3

யாழ்மாவட்ட கூட்டுறவுத் திணைக் களத்தில் கடமையாற்றும் உத்தியோகப்பற்றற்ற கணக்காய்வாளர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறும். (க-7)

## டிறிபேர்க் கல்லூரி மாணவர்களின கவனத்துக்கு!

இடம்பெயர்வினால் பல்வேறு இடங்களிலும் கல்வி கற்கும் டிறிபேர்க் கல்லூரி மாணவர்களை எதிர் வரும் 6ஆம் திகதிக்கு முன்னர் கோண்டாவில் நிரு கல்வி நிலையத்தில் இயங்கும் மேற்படி கல்லூரியுடன் தொடர்புகொள்ளுமாறு அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்வருடம் ஜி.சீ.ஈ. (சாதாரண தரப்) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள், ஜி.சீ.ஈ. (உயர்தர) வகுப்பில் கல்விகற்கும் மாணவர்கள், 9ஆம் வகுப்புப் பொதுப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளவர்கள், இடம்பெயர்ந்து இதுவரை தங்கள் பெயர்விவரங்களைக் கல்லூரியில் பதிவு செய்யாமல் இருப்பவர்கள் சகலரையும் தொடர்புகொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (க-5)

## சுழிபுரம் வடக்கு மக்களுக்கு விரைவில் மின்வசதி கிடைக்கும்

சுழிபுரம்,ஜுலை

சுழிபுரம் வடக்குப் பகுதி மக்களுக்கு மின்சார சபையினர் மின் விநியோகம் வழங்கும் வேலைகளைத் துரிதமாகச் செய்து வருகின்றனர். சுழிபுரம் கண்ணகியம்மன் கோயிலடிப் பகுதி வேலைகள் நடைபெற்று முடிவடைந்துள்ளன. மின்விநியோகம் நடைபெறுவதற்கான வேலைகள் யாவும் இம்மாதத்தில் நிறைவுபெற்றுவிடும் என்று தெரிவிக்கப்பட்டது.

சுழிபுரம் சம்புநாதேஸ்வரம் வரையும் மின் விநியோகம் செய்யப்படவுள்ளது.

இதேவேளை -

சுழிபுரம் சம்புநாதேஸ்வரம் புராதன பெருமைமிக்க இடமாகும். யோகி க.கார்த்திகேசு வாழ்ந்த இந்த இடத்தைப் பார்வையிட வருபவர்கள் தங்கி இளைப்பாறிச் செல்ல வசதிகள் செய்யப்படவுள்ளன. (க-28)


உ

கந்தர்மடம் அரசடி வீதி

அருள்மிகு செல்வநாகபூஷணி அம்பாள் திருக்கோயில்

அலங்காரத் திருவிழா

தினமும்காலை 7.00 மணிக்குப் பூசை.
பகல் 10.00 மணிக்கு விசேஷ பூசை.

04-07-2001 புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்குத் தேர்த்திருவிழா
05-07-2001 வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு
108 சங்காபிஷேகம், தீர்த்தோற்சவம்

அம்பிகை அடியார்கள் அனைவரும் வந்து தரிசித்து அருள்பெறுக.

- ஆலய தர்மகர்த்தா.

(89637)



கண்ணீர் அஞ்சலி

அமரர் இராமலிங்கம் வேலாயுதர்

(இளைப்பாறிய ஆசிரியர்)
கைதடி கயிற்றசிட்டி கந்தசுவாமி தேவஸ்தான
தர்மகர்த்தா சபை உறுப்பினரும், செயலாளருமான

அமரர் இராமலிங்கம் வேலாயுதர்

அவர்களின் திடீர் மரணம் குறித்து ஆழ்ந்த துயருறுகின்றோம். அவரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

பரிபாலன சபை,
கைதடி கயிற்றசிட்டி அருள்மிகு கந்தசுவாமி
தேவஸ்தானம்.

(89672)



31ஆம் நாள் நினைவஞ்சலி

டாக்டர் த.அருமைத்துரை

(பொறுப்பதிகாரி, மத்திய மருந்தகமும்
மகப்பேற்றுமனையும் - மானிப்பாய்)

எம்மக்கள் சேவைக்காகத் தன்னலம் கருதாது இறுதி வரை சேவையாற்றித் தன் இன்னுயிரைச் சேவைக்கே அர்ப்பணித்த எமது நண்பன் டாக்டர் த.அருமைத்துரை அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

பதிவுபெற்ற/உதவி வைத்திய
அதிகாரிகள் சங்கம் (TU361)
யாழ்.கிளை அங்கத்தினர்.

(89670)



நெஞ்சை விட்டகலா

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
24
-
01
-
1927

மறைவு
03
-
07
-
1998

அமரர் கதிரித்தம்பி கந்தசாமி அவர்கள்

ஆண்டுகள் மூன்று சென்றாலும் - எம்
நினைவில் என்றும் நீங்காது நிலைத்து
நிற்கும் அன்புத் தெய்வத்தின்
ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
வைரவப் பெருமானை வேண்டி நிற்கும்:

நிரந்தர முகவரி:-
மீசாலை மேற்கு,
மீசாலை.

தற்காலிக முகவரி:-
வதிரி, கரவெட்டி.

அன்பு மனைவி
திருமதி சிவபாக்கியம் கந்தசாமி
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(89641)



ஓராண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்
31
-
12
-
1951

ஆண்டவன் அடியில்
14
-
07
-
2000

திருமதி கருணானந்தன் கனகேஸ்வரி

வருடம் ஒன்று ஆனாலும் ஆறவில்லை
எம்துயரம்; அன்பின் பிறப்பிடமாய்,
பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய் நீங்கள் எம்முடன்
இருந்த நாள்களெல்லாம் நினைந்துருகி
நோக்குகையிலே எம்மைப் பண்பாக
வழிநடத்தி உம் பாசநிலை காட்டி
வந்தீர்! எம்பாசமுள்ள சித்தியே!
உங்கள் பிரிவினால் நாங்கள்
திக்கற்று நிற்கின்றோம்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வட்டு.கிழக்கு,
சித்தன்கேணி.

கணவர்,
பெறாமக்கள்:- இதயன், சதீஸ்.

(89660)

### அதிபர், ஆசிரியர்களினால்

# மாணவர்கள் தாக்கப்படுவது குறித்து சிறுவர் கண்காணிப்புக்குழு விசனம்

யாழ்ப்பாணம், ஜூலை 3

பாடசாலைகளில் அதிபர், ஆசிரியர்களினால் மாணவர்கள் தாக்கப்படும் சம்பவங்களுக்கு யாழ். மாவட்டச் சிறுவர் நலன் கண்காணிப்புக் குழு தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

யாழ், மாவட்ட சிறுவர் நலன் கண்காணிப்புக் குழுவின் கூட்டம் அதன் தலைவர் து. வைத்திலிங்கம் தலைமையில் கடந்த வியாழக்கிழமை யாழ். செயலகத்தில் நடைபெற்றது.

வல்வெட்டித்துறை மற்றும் மயிலணிப் பகுதிகளைச் சேர்ந்த பாடசாலைகளில் அண்மையில் ஆசிரியர்களினால் மாணவர்கள் தாக்கப்பட்ட சம்பவங்களுக்குக் கண்டனம் தெரிவித்து இக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பாடசாலைகளில் அதிபர்கள், ஆசிரியர்கள் தமது விருப்பு — வெறுப்புகளுக்காக மாணவர்களைத் துன்புறுத்தக் கூடாது என்றும் —

இந்தச் சம்பவங்கள் தொடர்பாகச் சம்பந்தப்பட்ட வலயக் கல்விப் பணிமனைகளிடம் இருந்து அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

எதிர்வரும் 16 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் யுனிசெவ் மற்றும் எஸ். சி. எவ் நிறுவனங்களுக்கு உதவி வழங்கும் பிரதிநிதியிடம் சிறுவர் உரிமைகள் தொடர்பான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த அறிக்கையைத் தயாரிப்பதற்காக வண. பிதா ஏ. ஐ. பேர்ணாட், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம், வேலணைப் பிரதேச செயலர் எஸ். இரத்தினம் ஆகியோரைக் கொண்ட குழு ஒன்றும் இக்கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டது.

(க-5)

### ஒப்பந்த அடிப்படையில்

# அஞ்சல் சேவை உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆள்சேர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 3

ஒப்பந்த அடிப்படையில் அஞ்சல் சேவை உத்தியோகத்தர் ('பி'பிரிவில் 1(ஆ) தரம்) பதவிகளுக்கு ஆள் சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்களை அஞ்சல் திணைக்களம் கோரியுள்ளது.

மேற்படி பதவிக்கு விண்ணப்பிப்போர் எதிர்வரும் 20ஆம் திகதியன்று 18வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும்—

ஜி.சீ.ஈ, உயர்தரப்பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருப்பதோடு, ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் ஒரே தடவையில் கணிதம், மொழி உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன், இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆறு பாடங்களில் சித்தியடைந்தவராகவும் இருக்கவேண்டும்,

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றிருப்பின் அது தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படும் என அஞ்சல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க விரும்பும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 'அஞ்சல் அதிபதி, அஞ்சல் தலைமை அலுவலகம், கொழும்பு - 00100' என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும் எனவும்—

விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் ''ஒப்பந்த அடிப்படையில் அஞ்சல் சேவை உத்தியோகத்தர் பதவிக்கு ஆள்சேர்ப்பு— யாழ்ப்பாணம் மாவட்டம்'' எனக் குறிப்பிடப்படவேண்டும் எனவும்— அறிவிக்கப்பட்டுள்ளது.

(க-7-5)

# 'கை கொடுத்தல் நிதி' திட்டம்: காசோலைகளை பெற அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட மாணவர் ஒன்றியத்தினரால் காணாமற்போன குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக வழங்கப்படும் ''கை கொடுத்தல் நிதி'' காசோலைகளை இதுவரை பெற்றுக்கொள்ளாத மாணவர்களை உடனடியாக மாணவர் ஒன்றியத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறு மாணவர் ஒன்றியப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவும் நோக்கில் ஒவ்வொரு மாணவருக்கும் தலா ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதுவரை காசோலைகளைப் பெற்றுக்கொள்ளாத மாணவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

**ஜி. சீ. ஈ. சாதாரண தரம்**

சின்னராசா சசிகுமார் [சங்குவேலி வடக்கு], சிதம்பரப்பிள்ளை கபீதினி [4 ஆம் வட்டாரம், வேலணை], வில்பிறட் ஜெறாட் [ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய்], நாகராசா சுரேஷ் [இணுவில் தெற்கு].

**ஜி. சீ. ஈ. உயர் தரம்**

தேவதாஸ் ஜெபதர்சன் [சுண்டுக்குளி], சின்னராசா ஸ்ரீபுஷ்பமலர் [சங்குவேலி வடக்கு], நாகராசா துஷ்யந்தி [இணுவில் தெற்கு]. நவரட்ணராஜா கலைவாணி [யாழ். பல்கலைக்கழகம்], ரி. சுரேஷ் [யாழ். தொழில்நுட்பக் கல்லூரி].

மேற்படி மாணவர்களுக்கு வழங்கப்படுவதற்காக வரையப்பட்ட காசோலைகளின் முதிர்வுத் திகதி நெருங்கியுள்ளதால் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் தமக்குரிய காசோலைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

[க-6]

## பாடசாலை பஸ் சீரின்மையால் மாணவர் பாதிப்பு

கோண்டாவில், ஜூலை 3

சீரற்ற பாடசாலை பஸ் சேவையால் இணுவில், கோண்டாவில், கொக்குவில் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் பாதிப்படைகின்றார்கள்.

தெல்லிப்பழைப் பகுதியில் இருந்து காலையில் யாழ். நோக்கி வரும் பாடசாலை பஸ்கள் மருதனார்மடத்திற்கு அப்பால் மாணவர்களை ஏற்றாமல் செல்கின்றன. அந்த பஸ்களில் இடநெருக்கடி காரணமாகவே மாணவர்களை ஏற்றுவதில்லை.

இதே நேரம் குறுகிய தூரச் சேவையாக மருதனார்மடம் பகுதியில் இருந்து யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரிவரை நடத்தப்படும் பஸ் சேவை சீராக நடைபெறாமையால் மாணவர்கள் பாதிப்படைகின்றார்கள்.

இணுவில், கோண்டாவில், கொக்குவில் பகுதிகளில் இருந்து யாழ். பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களின் நன்மைகருதி சீரான பஸ் சேவையை நடத்த வேண்டுமென மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(க-86)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 3

வண்ணைநகர் அருள்மிகு ஸ்ரீவிசுவேச விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இன்று மாலை 6 மணிக்கு சப்பறத் திருவிழாவும் நாளை காலை 9.30 மணிக்கு தேர்த் திருவிழாவும், நாளை மறுதினம் காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவிருக்கின்றன. (ஐ-3)

★ ★ ★

நல்லூர் ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலயத்தின் மணவாளக் கோல தினமான எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை வரையும் காலை 10 மணிக்கு நவகலச அபிஷேகமும் விசேட பூசையும் நடைபெறும்.

(க-10)

★ ★ ★

அளவெட்டி — நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலயத்தின் மணவாளக் கோலத்திருவிழா எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் நடைபெறவுள்ளது.

நண்பகல் 12 மணிக்கு 'பசுவின் புலம்பல்' என்ற நூல் வெளியீட்டு விழா இடம்பெறும். சங்கீத பிரசங்க வாரிதி ந. சிவசண்முகமூர்த்தி பாடல்களைப் பாடுவார்.

(க-7)

★ ★ ★

நீர்வேலி செல்லக் கதிர்காம சுவாமி கோயில் தேர்த்திருவிழா நாளை புதன்கிழமையும் தீர்த்தத் திருவிழா மறுநாள் வியாழக்கிழமையும் நடைபெற உள்ளன.

மேற்படி கோயில் மகோற்சவ நாள்களில் தினமும் ஆசிரியர் ச. லலீசன் தெய்வீக சொற்பொழிவாற்றி வருகிறார். [ஐ-72]

★ ★ ★

கோப்பாய் வெள்ளெருவை விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா நாளை புதன்கிழமை காலை 10.00 மணிக்கும், தீர்த்தத் திருவிழா மறுநாள் வியாழக்கிழமையும் நடைபெறவுள்ளன.

[ஐ-72]

# பெண்ணைக் கொலை செய்து அவரது நகைகள் கொள்ளை

## கொக்குவிலில் நடந்த கொடூரம்

கொக்குவில் கோயில் வீதிப் பகுதியில் வீட்டில் தனியாக இருந்த பெண் ஒருவரைத் தாக்கி அவரைக் கொலை செய்து, அவரது நகைகளை அபகரித்துச் சென்ற சம்பவம் ஒன்று நேற்று நண்பகல் ஒருமணியளவில் இடம்பெற்றுள்ளது.

கொக்குவில் கோயில் வீதியைச் சேர்ந்த எஸ். கனக சௌந்தரி (வயது 53) என்பவரே உயிரிழந்தவராவார்.

பிரஸ்தாப பெண் வீட்டில் தனித்திருந்த சமயம் அங்கு சென்ற கொள்ளையர் அவரைத் தாக்கியதாகவும் —

பின்னர் அவரது நகைகளைக் கொள்ளையடித்துக் கொண்டு தப்பி ஓடியதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பெண் வீட்டில் தொலைத்தொடர்பு நிலையம் ஒன்றை நடத்திவந்ததாகவும் —

தொலைபேசி அழைப்புப் பெறுவதற்கு வருவது போன்றே கொள்ளையர் வீட்டுக்குள் நுழைந்ததாகவும்—கூறப்பட்டது.

பெண்ணின் சடலம் மரண விசாரணைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சகோதரியாவார்.

(உ-4-5-6-9-10)

### அவசரகாலச் சட்ட நீடிப்பு விடயம்;

# முஸ்லிம் காங்கிரஸின் முடிவு இறுதி நேரமே தெரியும்

கொழும்பு, ஜுலை 3

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறும்போது—

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எவ்வாறு செயற்படுவது என்பது குறித்து அன்று காலை கூடும் கட்சியின் நாடாளுமன்றக் குழு முடிவு செய்யும் என்று அக்கட்சியின் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் மக்காவுக்குப் பயணம் மேற்கொள்வதற்கு முன்னர் கூடிய கட்சியின் அரசியற்பீடம் இது பற்றி ஆராய்ந்தது என்றும்—

அதன் பின்னரே இந்த முடிவு எடுக்கப்பட்டது என்றும்— அவர் மேலும் சொன்னார்.

கல்முனை, அக்கரைப்பற்றுப் பொலீஸ் நிலையங்களில் தமது அமைப்புக்கு எதிரானவர்களை பொலீஸாராக நியமித்துள்ள செயலுக்குக் கண்டனம் தெரிவிக்கவும்—

அவசரகால விதிகளை அரசு துஷ்பிரயோகம் செய்வதை அம்பலப்படுத்தவும்—

அவசரகாலச் சட்ட நீடிப்பை எதிர்க்க வேண்டும் எனக் கட்சித் தொண்டர்கள் விரும்புகின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(உ-3)

## மலசலகூடம் அமைக்கக் கோரிக்கை

வடமராட்சிகிழக்கு, ஜூலை3

மலசலகூடங்கள் அமைப்பதற்கு 'யுனிசெவ்' அமைப்பினால் வழங்கப்பட்டு வரும் உதவிகள் வடமராட்சி கிழக்குக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும்.

வடமராட்சி கிழக்குக்கான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் இ. ஈஸ்வரன் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்த மகஜர் ஒன்றையும் அவர் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப. வேலாயுதபிள்ளைக்கு அனுப்பிவைத்துள்ளார்.

(ஐ-7-182)

## கொழும்பு சென்ற யாழ். பல்கலை மாணவர் குழு

யாழ்ப்பாணம், ஜூலை 3

இலங்கை மன்றக் கல்லூரியின் ஏற்பாட்டில் கடந்த முதலாம், இரண்டாம் திகதிகளில் நடைபெற்ற சமாதான ஆய்வுப் பட்டறையில் கலந்து கொள்வதற்காக யாழ். பல்கலைக்கழகத்தில் எண்மர் கொண்ட மாணவர் ஒன்றியக் குழு ஒன்று கடந்த சனிக்கிழமை கொழும்பு சென்றுள்ளது.

சமாதான ஆய்வுப் பட்டறைக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து மாணவர் பிரதிநிதிகள் குழு ஒன்று கொழும்பு சென்றமை இதுவே முதல் தடவையாகும்.

(க-6)

## மிதிவெடியில் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 3

சிறுப்பிட்டிப் பகுதியில் நேற்றுக் காலை 9 மணியளவில் மாடு கட்டுவதற்காக தரையில் கம்பி ஒன்றை நாட்டியவர் அப்பகுதியில் புதைக்கப்பட்டிருந்த மிதிவெடி ஒன்று வெடித்ததில் படுகாயமடைந்தார்.

சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலியைச் சேர்ந்த முத்துக்குமாரு சிவகுமாரதாஸ் [வயது 57] என்ற குடும்பஸ்தரே கை மற்றும் கழுத்துப் பகுதியில் படுகாயமடைந்தநிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

[உ-6]

## சிறுவர்களுக்கு பிறப்புச் சான்றிதழ் பெற்றுத்தர ஏற்பாடு

யாழ். மாவட்டத்தில் பிறப்புச் சான்றிதழ்கள் இல்லாத—வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களிலுள்ள சிறுவர்களுக்கு இலவசமாக பிறப்புச் சான்றிதழ் பெற்றுக் கொடுப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

"யுனிசெவ்" நிறுவனத்தினால் இதற்கென ஒரு தொகை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பிறப்புச் சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளாதவர்கள் தமது பகுதி பிரதேச செயலருடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

[க-5]

## கௌரவிப்பு

கோப்பாய், ஜூலை 3

நீர்வேலி செல்லக்கதிர்காம தேவஸ்தான மஹோற்சவ காலத்தில் தெய்வீகச் சொற்பொழிவு ஆற்றிவந்த ஆசிரியர் ச. லலீசனைக் கௌரவிக்கும் வைபவம் ஆலயத்தில் எதிர்வரும் வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெற உள்ளது.

சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்த வைபவத்தில் அவருக்குச் 'சிவத்தமிழ்ச் சொல்லழகர்' என்ற பட்டத்தை ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ ரு. தியாகராஜக்குருக்கள் வழங்கிக் கௌரவிக்கவிருக்கின்றார். (ஐ-72)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## ஆனந்தா சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவாகம் நடைபெறுமா? நோய நீங்குமா? வெளிநாடு போகலாமா? கேட்டுப்பாருங்கள்! ஜாதகம், கைரேகை, எண் விஞ்ஞானம் என்பவற்றின் மூலமாகப் பலன் சொல்லப்படும். தொடர்பு: த.சிவானந்தன், பிரபல சோதிடர், ஆனந்தா சோதிடம், 216, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(89629)

## தவறிவிட்டது

வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை க.ஏகாம்பரம் என்பவருடைய தங்கப் பவுண் (21/2 பவுண்) டயமண்ட் சங்கிலியும் பெண்டனும் மேற்படி விலாசத்துக்கும் சித்தன்கேணிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(89678)

## தவறிவிட்டது

258, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி யோகாம்பிகை கனகசபாபதியின் விசேட அடையாள அட்டை (இல. 0902026590) நல்லூருக்கும், யாழ்நகருக்கும் இடையில பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் விலாசத்திலோ அல்லது City TeX நல்லூரிலோ ஒப்படைத்து உதவவும்.
(89661)

7/12 சுவாமியார் வீதி, கொழும்புத்துறையைச் சேர்ந்த வைரமுத்து தவபாக்கியம் என்பவருடைய தேசிய அ.அட்டை (இல.416550182V), விசேட அ.அட்டை என்பன மேற்படி விலாசத்துக்கும் வலம்புரம் சூசையப்பர் கோயிலுக்கும் இடையில் கைப்பையுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல. 32, சுவாமியார் வீதியிலுள்ள வீட்டில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.
(89675)

## உடன் விற்பனைக்கு

NEWSMATE - V50 இல.NPGG-4279 உடன் விற்பனைக்குண்டு. கிழமை நாள்களில் காலை 9.30 முதல் மாலை 3.30 மணிவரை பார்வையிடலாம். தொடர்பு- சி.நவரட்ணம், 272/4, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(89677)

## விற்பனைக்கு

2, 4, 6 K.W. LISTER ஜெனரேற்றர், 13K.V.A. 3 PHASE டைனமோ, B.S.A 3.5 மோட்டார் சைக்கிள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: மூர்த்தி, சிவன் வீதி, பரவைக்குளம் திருநெல்வேலி.
(89611)

## தோட்டக் காணி விற்பனைக்கு

சுமார் 50 பரப்புத் தோட்ட நிலம் நவக்கிரி, புத்தூர் வீதியில் நவக்கிரியில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு- விளம்பர இல.1317, மே/பா, உதயன்.
(89631)

# ஆயர் பணியில் 20 ஆண்டுகளை நிறைவு செய்யும் யாழ்.ஆயர்

உள்நாட்டு யுத்தத்தினால் பெரும் அழிவுகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் தமிழ் சமூகத்திற்காகச் சர்வதேச ரீதியில் குரல் கொடுத்துவரும் மதத் தலைவர் யாழ்.மறைமாவட்ட ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம் இன்று தமது ஆயர்பணியில் 20ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்றார்.



1981ஆம் ஆண்டில் றோமாபுரி பல்கலைக்கழகத்தில் விவிலிய இறையியல் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்ற இவர், அந்த வருடமே மன்னார் மறைமாவட்ட ஆயருக்கான நியமனத்தைப் பெற்றுக்கொண்டு மன்னார் மறைமாவட்டச் சமூகத்தின் சமய, சமூக, வளர்ச்சிகளுக்காகப் பணியாற்றி வந்தார்.

குடாநாட்டில் விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையில் மீண்டும் யுத்தம் ஆரம்பித்த 1992ஆம் ஆண்டில் யாழ்.மறைமாவட்டத்தின் 7ஆவது ஆயராகத் திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பரால் நியமனம் செய்யப்பட்டு குடாநாட்டுக்கு வந்தார்.

யாழ்.மறைமாவட்ட ஆயராகப் பொறுப்பேற்ற அன்றைய தினம் உரையாற்றிய போது, யுத்தத்தால் நுண்பப்படும் தமிழ்ச் சமூகத்திற்காகக் குரல் கொடுத்து அவர்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக எனது சமயப் பணிகளுடன் இயன்றவரையில் உழைத்து வருவேன் என்று குறிப்பிட்டிருந்தார்.

அன்றில் இருந்து இன்றுவரை குடாநாட்டில் தமிழ் மக்கள் அவலப்படும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சமயத்தைத் தாண்டி சமூக உணர்வுடன் அவர்களுக்காகச் சர்வதேச ரீதியில் குரல் கொடுத்துவரும் மதத் தலைவர் என்ற வகையில் இவரது பணி மேலும் தொடர இந்த நன்னாளில் இறைவனிடம் பிரார்த்திக்கிறோம்.

1938ஆம் ஆண்டில் பிறந்த ஆயர் அவர்கள் இறை அழைத்தலை ஏற்றுக் குருத்துவக் கல்லூரியில் இணைந்து 1963ஆம் ஆண்டு புதிய அருட்குருவராகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

தமது பங்கு வாழ்க்கையில் யாழ். பேராலயம், பெரியவிளான், நாரணட்டான், வங்காலை ஆகிய பங்குத் தலங்களில் இறைபணியாற்றிய இவர், 1973ஆம் ஆண்டு தொடக்கம் 1977ஆம் ஆண்டுவரை யாழ்.மறைக்கல்வி நடுநிலைய இயக்குநராகவும் பணியாற்றிவந்தார்.

1992ஆம் ஆண்டில் யாழ்.ஆயராக நியமனம் பெற்றதில் இருந்து குடாநாட்டில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் குறித்துத் தொடர்ந்தும் எடுத்துரைத்து வருகிறார்.

1995ஆம் ஆண்டில் குடாநாட்டு மக்கள் அனைவரும் இடம்பெயர்ந்த போதும், 1996ஆம் ஆண்டில் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் குடாநாடு வந்த பின்னர் தமிழ் இளைஞர், யுவதிகள் காணாமற்போன சமயத்திலும் குடாநாட்டுப் புத்திஜீவிகளை ஒன்றிணைத்து அதனைத் தடுப்பதற்காகப் பாடுபட்டவர்.

குடாநாட்டுக்கும் வெளி மாவட்டங்களுக்கும் இடையில் தரைவழித் தொடர்புகள் அற்ற நிலையில் மக்கள் படும் துன்பங்களைக் கண்டு தரை வழிப்பாதை ஒன்றைத் திறந்து மக்களுக்கு உதவுமாறு இருதரப்பாரிடமும் வேண்டுகோள் விடுத்துவருகின்றார்.

கொழும்பில் இருந்து குடாநாட்டு நிலைமைகளை அறிவதற்காக வருகைதரும் சமயத் தலைவர்கள் முதல் வெளிநாட்டுத் தூதுவர்கள் வரை அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்று தமிழ் சமூகத்தின் இன்றைய நிலைமைகளை அவர்களுக்குத் தெளிவாக எடுத்துரைத்து வருகிறார்.

- வதனன் -

மதத்தலைவர் என்பதற்கு அப்பால் ஒரு தமிழ் மகன் என்றவகையிலும் ஒடுக்கப்பட்டு வரும் சமூகம் என்ற வகையிலும் இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ மதத் தலைவர்களையும் ஒன்றிணைத்து மக்களின் விடுதலைக்காகப் பாடுபட்டுவரும் ஆயரின் பணிகள் மேலும் தொடர மதத்துக்கு அப்பாற்பட்ட நிலையில் சமூகம் என்ற வகையில் நாம் அனைவரும் அவரை வாழ்த்துவோமாக!

## தென்மராட்சி மாணவர்களுக்கு சீருடை அன்பளிப்பு

தென்மராட்சி,ஜூலை3

பளைப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சிப் பிரதேசத்தில் இயங்கும் பாடசாலைகளில் கல்வி பயிலும் வறுமைக் [illegible]டின் கீழ் வாழும் குடும்பங்கை[illegible]ந்த 100 மாணவர்களுக்கு சீருடைகளும், 75 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் அண்மையில் புலோலியில் இயங்கும் பளைப் பிரதேச செயல உப அலுவலகத்தில் வழங்கப்பட்டன.

இவற்றினை வழங்குவதற்கு சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினர் 61 ஆயிரத்து 500ரூபாவை வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. (சு-117)



# பெருமதிப்புடன் நன்றி கூறுகின்றோம்

சங்கானை ஐக்கிய நலன்புரிச் சங்கக் கட்டடத்திற்கு நிதி உதவி வழங்கிய

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ்மொழி விவகாரங்கள் அமுலாக்கல், இந்து கலாசார அமைச்சரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிச் செயலாளர் நாயகமுமான



மாண்புமிகு அமைச்சர்
கௌரவ
கே. என். டக்ளஸ் தேவானந்தா
அவர்களுக்கு எமது உளங் கனிந்த நன்றிகளையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதோடு

யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரான
கௌரவ எஸ்.சிவதாசன் அவர்களுக்கும்

சங்கானை நகர அபிவிருத்திக்கும், எமது சங்கத்தின் கட்டடத்தேவையின் முக்கியத்துவத்தைக் கௌரவ அமைச்சருக்கு எடுத்துக்கூறி அதற்கான நிதிவசதியை நாம் பெற்றுக்கொள்ள உதவிய வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவரும், ஈ.பி.டி.பி. இந்துசமய விவகாரப் பொறுப்பாளருமான



திரு. ந. திரிலோகநாதன்
அவர்களுக்கும்
எமது உளங் கனிந்த
நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது உளங்கனிந்த நன்றிகள்.

ஒடக்கரை வீதி,
சங்கானை.

சங்கானை
ஐக்கிய நலன்புரிச் சங்கம்.


# மரண அறிவித்தல்கள்

## திருமதி கருப்பையா சரஸ்வதி

அரியாலையைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது 532, நாவலர் வீதி, அரியாலையை வசிப்பிடமாகக்கொண்ட திருமதி கருப்பையா சரஸ்வதி 27-06-2001 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கருப்பையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செல்லம்மா ஆகியோரின் அன்புப் புதல்வியும், சந்திராணி, துரைசிங்கம், குணசிங்கம், மகேந்திரன், பாலேந்திரன், காலஞ்சென்றவர்களான இந்திராணி, ரஞ்சன் மற்றும் மனோகரன், வசந்தி (ஆசிரியை, யா/பூம்புகார் அ.த.க.பாடசாலை தற்போது கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெறுபவர்), மதனராஜ் ஆகியோரின் அன்புத் தாயாரும், நாகராசா, கமலராணி, தேவமலர், பேரின்பராணி, இராசலக்ஷ்மி, வதனி, தியாகலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நாளை (04-07-2001) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அரியாலை செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

நாவலர் வீதி,
அரியாலை. (89686)

தகவல் :- பாலேந்திரன்
(மகன்)

## திருமதி புவனேஸ்வரி சின்னத்தம்பி

விதானையார் வளவு, குரு வீதி, காங்கேசன்துறையைச் சேர்ந்த திருமதி புவனேஸ்வரி சின்னத்தம்பி அவர்கள் நேற்று (02.07.2001) திங்கட்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விதானையார் ஆறுமுகம் சின்னத்தம்பி அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை - பொன்னம்மா தம்பதிகளின் அருமை மகளும், சிவகாமசுந்தரி (U.K), ஆறுமுகதாசன் (U.K), பொன்னம்பலவாணர் (U.K), அன்னலட்சுமி (U.K), பரமகுருநாதன் (கொழும்பு), ஞானசரஸ்வதி (ஆசிரியை - நடேஸ்வராக் கல்லூரி/அருணோதயக் கல்லூரி), சக்திவேல் (U.K), விக்கினேஸ்வரன் (U.K), சிவானந்தன் (U.K) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் சிவகுருநாதன் (கனடா) ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்போதைய முகவரி:
'ரைப்பிங் வாசா'
அம்பலவாணர் வீதி, உடுவில். (89682)

தகவல்:
ஞானசரஸ்வதி
(ராணி - மகள்)

## சின்னத்தம்பி துரைரத்தினம்

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி துரைரத்தினம் நேற்று (02.07.2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கண்மணியின் அன்புக் கணவரும், பாலச்சந்திரன் (கனடா), சிவமலர், கருணாமலர் (ஆசிரியை, மல்லாகம் றோ.க.பாடசாலை), ஜெயச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பத்மலோஜினி (கனடா), சத்திவேல் (கட்டடத் திணைக்களம்), மோகனசுந்தரம் ஆகியோரின் அன்பு மாமனாரும், லவன், யசஸ்வினி, திஸ்விஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2001) செவ்வாய்க்கிழமை காலை 11 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் பண்டத்தரிப்பு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி தெற்கு,
அளவெட்டி. (89687)

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.




உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷு வருடம் ஆனித் திங்கள் 20 ஆம் நாள் நாளை (04-07-2001) புதன்கிழமை காலை 8.30 மணி முதல் 10.00 மணி வரையுள்ள சோட்கட நட்சத்திரமும், அமிர்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்,

அளவெட்டி வடக்கு
சிவஞானசுந்தரம் தம்பதிகளின் புத்திரன்
திருநிறை செல்வன்
ஆதித்தன் (நோர்வே)
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
விஜயகுமாரி
(சாந்தி) ஆசிரியை
அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு பாலைகள் இல்லத்தில் திருமாங்கல்யதாரணம் நடத்தத் திருவருள் கைகூடியிருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் சுற்றஞ்சூழ சமுகம் தந்து புதுமணத் தம்பதிகளை ஆசீர்வதித்து, அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்:

தவமணி கந்தசாமி
ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.

திரு. திருமதி சிவஞானசுந்தரம்,
அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

(இந்தவிட்டார் அழைப்பு)

தற்காலிக முகவரி:
பிரதான வீதி, சண்டிலிப்பாய்.

(89680)

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஜூலை3

யாழ்மாவட்டத்தில் இருந்து வெளி இடங்களுக்குச் செல்வதற்கான பயண அனுமதிக்கு விண்ணப்பித்தவர்களில் கடந்த மாதம் 27ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்களில் ஒரு தொகுதி கடந்த 30.06.2001 ஆம் திகதிய உதயனில் வெளியா கியது தெரிந்ததே. மிகுதி இலங்கங்கள் இங்கு பிரசுரமாகிறது.

**நல்லூர்**

| | | |
|---|---|---|
| (148224ஏ) | (148224பி) | (148224சி) |
| (148224டி) | (163054ஏ) | (163054பி) |
| (163054சி) | (173460ஏ) | (173460பி) |
| (178076ஏ) | (178076பி) | (178076சி) |
| (178354ஏ) | (178354பி) | (179792ஏ) |
| (180041ஏ) | (182244ஏ) | (182244பி) |
| (185989ஏ) | (185989பி) | (185989சி) |
| (186032ஏ) | (186032பி) | (186032சி) |
| (186117ஏ) | (186175ஏ) | (186311ஏ) |
| (186311பி) | (186311சி) | (186311டி) |
| (186311ஈ) | (188842ஏ) | (188842பி) |
| (188886ஏ) | (188886பி) | (188886சி) |
| (188950ஏ) | (188976ஏ) | (188976பி) |
| (188976சி) | (188976டி) | (189018ஏ) |
| (189018பி) | (189024ஏ) | (189162ஏ) |
| (189178ஏ) | (189178பி) | (189178சி) |
| (189178டி) | (189210ஏ) | (189218ஏ) |
| (189239ஏ) | (189239பி) | (189251ஏ) |
| (189251பி) | (189253ஏ) | (189287ஏ) |
| (190770ஏ) | (190770பி) | (190789ஏ) |
| (190848ஏ) | (190851ஏ) | (190853ஏ) |
| (190864ஏ) | (190869ஏ) | (190869பி) |
| (190869சி) | (190869டி) | (190874ஏ) |
| (190874பி) | (190874சி) | (190874டி) |
| (190892ஏ) | (190918ஏ) | (190918பி) |
| (190918சி) | (190925ஏ) | (190925பி) |
| (190927ஏ) | (190927பி) | (190932ஏ) |
| (190938ஏ) | (190949ஏ) | (190963ஏ) |
| (190978ஏ) | (191018ஏ) | (191031ஏ) |
| (191031பி) | (191031சி) | (191048ஏ) |
| (191048பி) | (191066ஏ) | (191079ஏ) |
| (191079பி) | (191215ஏ) | (191215பி) |
| (191215சி) | (193325ஏ) | (193325பி) |
| (193325சி) | (193325டி) | (193478ஏ) |
| (193478பி) | (193478சி) | (193478டி) |
| (193491ஏ) | (195237ஏ) | (182272ஏ) |
| (189403ஏ) | (189466ஏ) | (189466பி) |
| (190563ஏ) | (190650ஏ) | (190650பி) |
| (190687ஏ) | (191790ஏ) | (191965ஏ) |
| (192039ஏ) | (192040ஏ) | |

**சண்டிலிப்பாய்**

| | | |
|---|---|---|
| (182788ஏ) | (185102ஏ) | (185207ஏ) |
| (185243ஏ) | (186854ஏ) | (186854பி) |
| (186934ஏ) | (187015ஏ) | (188628ஏ) |
| (188628பி) | (188628சி) | (188701ஏ) |
| (188711ஏ) | (188711பி) | (188711சி) |
| (189320ஏ) | (189418ஏ) | (189492ஏ) |
| (189492பி) | (189543ஏ) | (189591ஏ) |
| (189599ஏ) | (189599பி) | (190463ஏ) |
| (190485ஏ) | (190485பி) | (190485சி) |
| (190485டி) | (190501ஏ) | (190501பி) |
| (190546ஏ) | (190564ஏ) | (190570ஏ) |
| (190570பி) | (190570சி) | (190599ஏ) |
| (190600ஏ) | (190600பி) | (190600சி) |
| (190625ஏ) | (190628ஏ) | (190640ஏ) |
| (190660ஏ) | (190660பி) | (190665ஏ) |
| (190666ஏ) | (190674ஏ) | (190741ஏ) |
| (191554ஏ) | (191554பி) | (191760ஏ) |
| (191812ஏ) | (191812பி) | (191837ஏ) |
| (191837பி) | (191837சி) | (191837டி) |
| (191838ஏ) | (191846ஏ) | (191846பி) |
| (191886ஏ) | (191900ஏ) | (191906ஏ) |
| (191906பி) | (191906சி) | (191906டி) |
| (191908ஏ) | (191910ஏ) | (191910பி) |
| (191910சி) | (191910டி) | (191968ஏ) |
| (192012ஏ) | (192021ஏ) | (192036ஏ) |
| (192036பி) | (192036சி) | (192036டி) |
| (192037ஏ) | (192218ஏ) | (192218பி) |
| (192268ஏ) | (192268பி) | (194836ஏ) |
| (198492ஏ) | | |

**தெல்லிப்பழை**

| | | |
|---|---|---|
| (184866ஏ) | (186991ஏ) | (187195ஏ) |
| (188650ஏ) | (189471ஏ) | (189576ஏ) |
| (189576பி) | (190472ஏ) | (190494ஏ) |
| (190494பி) | (190537ஏ) | (190543ஏ) |
| (190543பி) | (190543சி) | (190706ஏ) |
| (190715ஏ) | (191835ஏ) | (191835பி) |
| (191844ஏ) | (191875ஏ) | (191887ஏ) |
| (191887பி) | (191909ஏ) | (191923ஏ) |
| (192008ஏ) | (192015ஏ) | (192015பி) |
| (192016ஏ) | (192195ஏ) | (192249ஏ) |
| (192249பி) | (192249சி) | |

**உடுவில்**

| | | |
|---|---|---|
| (172857ஏ) | (176568ஏ) | (176568பி) |
| (179207ஏ) | (179207பி) | (180358ஏ) |
| (180358பி) | (180359ஏ) | (180362ஏ) |
| (183129ஏ) | (183272ஏ) | (183272பி) |
| (186840ஏ) | (186840பி) | (186840சி) |
| (187088ஏ) | (187088பி) | (187088சி) |
| (187088டி) | (187090ஏ) | (187090பி) |
| (187090சி) | (187090டி) | (187090ஈ) |
| (187090எவ்) | (187141ஏ) | (187141பி) |
| (187153ஏ) | (187153பி) | (187153சி) |
| (189318ஏ) | (189338ஏ) | (189399ஏ) |
| (189399பி) | (189419ஏ) | (189457ஏ) |
| (189457பி) | (189457சி) | (189457டி) |
| (189459ஏ) | (189459பி) | (189477ஏ) |
| (189477பி) | (189477சி) | (189509ஏ) |
| (189533ஏ) | (189537ஏ) | (190471ஏ) |
| (190557ஏ) | (190561ஏ) | (190625பி) |
| (190627ஏ) | (190627பி) | (190627சி) |
| (190630ஏ) | (190633ஏ) | (190634ஏ) |
| (190634பி) | (190690ஏ) | (190690பி) |
| (190690சி) | (190743ஏ) | (190743பி) |
| (191755ஏ) | (191756ஏ) | (191756பி) |
| (191759ஏ) | (191774ஏ) | (191801ஏ) |
| (191802ஏ) | (191824ஏ) | (191829ஏ) |
| (191830ஏ) | (191830பி) | (191830சி) |
| (191899ஏ) | (191899பி) | (191941ஏ) |
| (191941பி) | (191956ஏ) | (191956பி) |
| (191964ஏ) | (192009ஏ) | (192049ஏ) |
| (192049பி) | | |

கடந்த 28ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

**யாழ்ப்பாணம்**

| | | |
|---|---|---|
| (161182ஏ) | (161182பி) | (161182சி) |
| (168444ஏ) | (177758ஏ) | (177758பி) |
| (177758சி) | (177758டி) | (177758ஈ) |
| (177758எவ்) | (181754ஏ) | (183320ஏ) |
| (183320பி) | (184554ஏ) | (185854பி) |
| (185854சி) | (185854டி) | (185865ஏ) |
| (185868ஏ) | (185868பி) | (186283ஏ) |
| (186283பி) | (186283சி) | (189176ஏ) |
| (189189ஏ) | (189189பி) | (189297ஏ) |
| (189297பி) | (189297சி) | (189618ஏ) |
| (189696ஏ) | (189696பி) | (190001ஏ) |
| (190902ஏ) | (190902பி) | (190902சி) |
| (191014ஏ) | (191014பி) | (191126ஏ) |
| (191193ஏ) | (191193பி) | (191967ஏ) |
| (191967பி) | (191967சி) | (191967டி) |
| (192999ஏ) | (193032ஏ) | (193032பி) |
| (193035ஏ) | (193067ஏ) | (193067பி) |
| (193076ஏ) | (193081ஏ) | (193142ஏ) |
| (193206ஏ) | (193206பி) | (193216ஏ) |
| (193261ஏ) | (193261பி) | (193269ஏ) |
| (193289ஏ) | (193297ஏ) | (193323ஏ) |
| (193326ஏ) | (193340ஏ) | (193340பி) |
| (193359ஏ) | (193359பி) | (193359சி) |
| (193359டி) | (193380ஏ) | (193419ஏ) |
| (193428ஏ) | (193428பி) | (193428சி) |
| (193433ஏ) | (193433பி) | (193457ஏ) |
| (193457பி) | (193470ஏ) | (193470பி) |
| (193470சி) | (193478ஏ) | (193478பி) |
| (193478சி) | (193478டி) | (193478ஈ) |
| (194224ஏ) | (194224பி) | (194224சி) |
| (195151ஏ) | (195180ஏ) | (195182ஏ) |
| (195183ஏ) | (195183பி) | (195189ஏ) |
| (195189பி) | (195189சி) | (195198ஏ) |
| (195211ஏ) | (195222ஏ) | (195222பி) |
| (195226ஏ) | (195226பி) | (195226சி) |
| (195226டி) | (195226ஈ) | (195239ஏ) |
| (195247ஏ) | (195256ஏ) | (195257ஏ) |
| (195275ஏ) | (195279ஏ) | (195279பி) |
| (195279சி) | (195279டி) | (195282ஏ) |
| (195283ஏ) | (195286பி) | (195287ஏ) |
| (195287பி) | (195291ஏ) | (195292ஏ) |
| (195300ஏ) | (195300பி) | (195301ஏ) |
| (195302ஏ) | (195303ஏ) | (195310ஏ) |
| (195310பி) | (195321ஏ) | (195323ஏ) |
| (195335ஏ) | (195335பி) | (195335சி) |
| (195335டி) | (195354ஏ) | (195354பி) |
| (195358ஏ) | (195358பி) | (195361ஏ) |
| (195361பி) | (195370ஏ) | (195394ஏ) |
| (195394பி) | (195398ஏ) | (195398பி) |
| (195419ஏ) | (195437ஏ) | (195437பி) |
| (195439ஏ) | (195439பி) | (195463ஏ) |
| (195477ஏ) | (195495ஏ) | (195500ஏ) |
| (195506ஏ) | (195510ஏ) | (195525ஏ) |
| (195525பி) | (195535ஏ) | (195552ஏ) |
| (195567ஏ) | (195593ஏ) | (195714ஏ) |
| (195716ஏ) | (195716பி) | (195716சி) |
| (195745ஏ) | (196219ஏ) | (196226ஏ) |
| (196226பி) | (196226சி) | (197219ஏ) |
| (198009ஏ) | (199646ஏ) | (199646பி) |
| (199646சி) | (199646டி) | |

**கோப்பாய்**

| | | |
|---|---|---|
| (195316ஏ) | (197212ஏ) | (197212பி) |

**நல்லூர்**

| | | |
|---|---|---|
| (183268ஏ) | (184588ஏ) | (189686ஏ) |
| (191160ஏ) | (193042ஏ) | (193042பி) |
| (193042சி) | (193129ஏ) | (193451ஏ) |
| (193456ஏ) | (193456பி) | (193456சி) |
| (193456டி) | (193456ஈ) | (193456எவ்) |
| (194345ஏ) | (195155ஏ) | (195192ஏ) |
| (195229ஏ) | (195235ஏ) | (195249ஏ) |
| (195249பி) | (195249சி) | (195259ஏ) |
| (195259பி) | (195261ஏ) | (195261பி) |
| (195261சி) | (195263ஏ) | (195263பி) |
| (195263சி) | (195273ஏ) | (195286ஏ) |
| (195290ஏ) | (195290பி) | (195290சி) |
| (195317ஏ) | (195317பி) | (195342ஏ) |
| (195342பி) | (195352ஏ) | (195352பி) |
| (195359ஏ) | (195376ஏ) | (195388ஏ) |
| (195400ஏ) | (195404ஏ) | (195420ஏ) |
| (195420பி) | (195420சி) | (195423பி) |
| (195423சி) | (195424ஏ) | (195458ஏ) |
| (195461ஏ) | (195462ஏ) | (195462பி) |
| (195464ஏ) | (195468ஏ) | (195468பி) |
| (195468சி) | (195468டி) | (195499ஏ) |
| (195509ஏ) | | |

(க-10)

## பிற்போடப்பட்டுள்ளது

03-07-2001 இல் நிகழவிருந்த இறுதி வருட பொதுக்கலை மாணவர்களுக்கான ஒன்றுகூடல் தவிர்க்க முடியாத காரணத்தினால் 04-07-2001 புதன்கிழமை 2.00 மணிக்கு பிற்போடப் பட்டுள்ளது.

(89693) - பிரதிநிதி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பிரதி பிராந்தியப் பணிப்பாளர் வலயம் 4

**உயர்திரு. ந.யோகராஜன்**

J.P.(All ISLAND)
B.A. P.G. Dip. in Edu. & Dip. in Tech. Edu. SLTES

அவர்கள் தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் பிரதிப் பிராந்தியப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு மன மகிழ்ச்சி அடைகின்றோம். அவர் பல்லாண்டு காலம் வாழ்க எனப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**விவசாய உபகரணம் திருத்துதலும் பராமரித்தலும்**

*தொழில்நுட்பக் கல்லூரி,*
*யாழ்ப்பாணம்.* (89691) ஆசிரியர்கள்,மாணவர்கள்.

## பின்னுறுதித் தீர்வை

**யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்**

அருளப்பு றொபேட் பாஸ்கரன்
*1141, கோயில் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

வழக்காளி

**வழ.இல.மணநீக்கம்/215**

எதிராக

பாஸ்கரன் பெண் டொறின் பேஜினி,
*மே/பா - வண.பிதா சபரிப்பிள்ளை றெஜினோல்ட்*
*ஊற்றுப்புலம், முறிப்பு,*
*அக்கராயன்குளம்.*

எதிராளி

இவ்வழக்கு, 2001ஆம் ஆண்டு ஆனி மாதம் 11ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் மாவட்ட நீதிபதி திரு. பா. சுப்பிரமணியம் அவர்கள் முன்னிலையில் வந்த போது வழக்காளியும், வழக்காளி சார்பில் சட்டத்தரணி திரு. இ. ஜெயசிங்கம் அவர்களும் பிரசன்னமாயிருக்க 19.04.2001ஆம் திகதி வலம்புரி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அழைப்புக் கட்டளைக்கு எதிராளி இன்று வரை எதுவித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால் இன்று ஒரு முக விளக்கத்துக்கு எடுக்கப்பட்டு குறிக்கு சட்டத்தரணி திரு.இ.ஜெயசிங்கம் அவர்கள் வழக்காளியின் சாட்சியத்தை நெறிப்படுத்தியபோது மன்று வழக்காளியின் சாட்சியத்தையும் வ 1 என்று அடையாளமிடப்பட்டு இணைக்கப்பட்டுள்ள விவாகப் பதிவுப் பத்திரத்தையும் மேலும் வழக்கில் இட்ட பிராதினையும் நன்கு பரிசீலனை செய்து பின்வருமாறு கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

குறித்த வழக்காளியை எதிராளி வன்முறையாக கைவிட்டுச் சென்றுள்ளார் எனக் கண்டு வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையே 1993 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 15ஆம் திகதி நடைபெற்ற திருமணப் பதிவை இத்தால் வெற்றும் வெறிதுமாக்கி கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

இப்பின்னுறுதித் தீர்வை உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் இப்பின்னுறுதித் தீர்வையானது ஏன் முற்றான தீர்வையாக்கப்படக்கூடாதென்பதற்கு ஏதாவது காரணம் காட்டப்படாதவிடத்து விதிக்கப்பட்ட காலம் முடிவடைந்ததன் பின்னர் இப்பின்னுறுதித் தீர்வை முற்றான தீர்வையாக்கப்படுமென இத்தால் கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

2001ஆம் ஆண்டு ஆனி மாதம் 11ஆம் திகதி

*வரைந்தது,*
இ.ஜெயசிங்கம்
வழக்காளியின் சட்டத்தரணி

*ஒப்பம். இ.த.விக்னராஜா*
மாவட்ட நீதிபதி
29.06.2001

*நீதிமன்றக் கட்டளைப்படி*
து.சிறீமோகன்
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

(89689)


**ராஜா** யாழ்ப்பாணம்

8வேடங்களில் நடித்த
அஜித்,
வசுந்தராதாஸ், நக்மா, மீனா
மற்றும் பலர் நடிப்பில்

CITIZEN சிட்டிசன்

தினசரி 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2.00, 5.00(பு.நே.)

(C/17286)

**லஷ்சுமி** இணுவில்.

விஜயகாந்த்,லைலா, நாசர்
நடித்த

கள்ளழகர்

(ரீல்ஸ்)
S.T.R.பிலிம்ஸ் புதிய வெளியீடு.
தினசரி காட்சிகள் : 10.30, 2.30 (ம.நே.)

(89688)

**நாகம்ஸ்** சுன்னாகம்

சுப்பர்ஸ்ரார் விஜயசாந்தி,
சரத்குமார், வெங்கடேஸ்
நடித்த

முதலமைச்சர் ஜெயந்தி

வெண்திரையில் முதன் முதல்
சுப்பர் ஸ்ரார் விஜயசாந்தியின் படம்
(ரீல்ஸ் வெளியீடு)
தினசரி: 11.00, 2.30(புதிய நேரம்)
சனி, ஞாயிறுகளில் 6.30 காட்சியும் உண்டு

(89691)


## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் மயில்வாகனம்

(ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்)

திக்கத்தைப் பிறப்பிடமாகவும் வதிரியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் மயில்வாகனம் அவர்கள் நேற்று (02.07.2001) திங்கட்கிழமை அதிகாலை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மீனாட்சி அவர்களின் அன்புக் கணவரும் கணேஷ், கந்தசாமி, தங்கம்மா, இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் மூத்த சகோதரரும் ஜெயரைதுராசா (அதிபர், யா/வேதாரினிஸ்வர வித்தியாலயம்), ஜெயானந்தராசா (கனடா), சற்குணானந்ததேவி (ஆசிரியை, யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆழ்வாப்பிள்ளை (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்), அம்பிகா, செல்வராணி (கனடா) ஆகியோரின் மாமனாரும் புருஷோத்தமன், துர்க்கா, காயத்திரி, குருகுலான், ஐங்கரன், நருமதா, அபிராமி, உமாசுதன், பிரகாஷ் (கனடா), ருபினி (கனடா), ஜெயசாயினி (கனடா) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (02.07.2001) திங்கட்கிழமை நண்பகல் 1.00 மணியளவில் நடைபெற்றுத் தகனக்கிரியை ஆலங்கட்டை மயானத்தில் இடம்பெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*அமுதசுரபி,*
*பாடசாலை வீதி,*
*நெல்லியடி கிழக்கு,*
*கரவெட்டி.*

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்.

(C/17283)

### கந்தையா பொன்னுத்துரை

மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பொன்னுத்துரை நேற்று (02-07-2001) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான கந்தையா பொன்னாச்சியின் அன்பு மகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை, நாகம்மா ஆகியோரின் மூத்த மருமகனும் சியாமகுணாபகீரதன் (சுவிஸ்), ஸ்ரீதரன் (நோர்வே), மதிவதனி (ஜேர்மனி), கிரிதரன் (சுவிஸ்), துஷ்யந்தி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் பாலசிங்கம், தபோதினி, பாரதி, ஸ்ரீரஞ்சன், ஜெஜோதினி, சற்குணமாறன் ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரதீபன், அர்ச்சனா, பதுநிஷா, ஈழவன், பிரணவன், மிதுஷன், தபஸ்வினி, இலக்கியன், கிரேஷ், தெய்வீகா ஆகியோரின் அன்புத் தாத்தாவும் காலஞ்சென்றவர்களான சின்னம்மா, சரஸ்வதி மற்றும் சிவக்கொழுந்து ஆகியோரின் அன்புச் சகோதரரும் நாகேஸ்வரன், நாகலெட்சுமி, ராஜேஸ்வரன், ராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு நாளை (04-07-2001) புதன்கிழமை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*155, நாவலர்தோட்ட வீதி,*
*யாழ்ப்பாணம்.* (89695)

தகவல்:-
சு.பாலசிங்கம்
(மருமகன்.)

# கடையடைப்புக்கு ஓரளவே ஆதரவு

சென்னை,ஜூலை3

கலைஞர் கருணாநிதி கைது செய்யப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்து தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகள் நேற்று அழைப்பு விடுத்திருந்த 12 மணிநேர கடையடைப்பு போராட்டத்துக்கு தமிழ் நாட்டில் ஓரளவே வெற்றி கிட்டியது.

வங்கிகள், அரசு, தனியார் அலுவலகங்கள் இயங்கியபோதும், ஊழியர்களின் வருகை மிகக் குறைந்தே காணப்பட்டது.

பஸ்,ரயில் சேவைகள் ஓரளவு நடைபெற்றபோதும் பயணிகளின் எண்ணிக்கை குறைந்திருந்தது.

**பாடசாலைகள், கடைகள் மூடப்பட்டுக் கிடந்தன**

சுமார் 25 அரச பஸ்கள் கல்வீச்சுக்களுக்கு இலக்காகி சேதமடைந்தன.

ஹர்த்தாலை தோல்வியடையச் செய்வதற்கு அரசு இயந்திரம் முழு வீச்சில் முடுக்கிவிடப்பட்டதாகவும்- மூடிய கடைகளைத் திறக்கும்படி அரசு தரப்பில் மிரட்டல்கள் விடப்பட்டதாகவும் - தி.மு.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியினர் தெரிவித்தனர்.

இதேவேளை -

பாண்டிச்சேரியில் ஹர்த்தால் முழு வெற்றியடைந்ததாகவும் -

அங்கு அன்றாட வாழ்க்கை ஸ்தம்பிதமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. ஹர்த்தாலையொட்டி கலவரம் செய்பவர்களைக் கண்ட இடத்தில் சுடும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

அத்துடன் நேற்று சுமார் 25 ஆயிரம் தி.மு.கவினர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை சுமார் 50 ஆயிரம் என்றும் -

குடிதண்ணீர் மற்றும் உணவு ஆகிய அத்தியாவசிய தேவைகள் கூடவும் வழங்கப்படாமல் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும்-

சிறையில் தாக்கப்பட்டுள்ளதாகவும் - தி.மு.க. நேற்று மனித உரிமைகள் ஆணையத்தில் முறையிட்டது.



நேற்று தமிழகக் கடையடைப்புக் காரணமாக சென்னை அண்ணா சாலை மேம்பாலம் வெறிச்சோடிக் கிடக்கின்றது.

## குண்டுவீச்சு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நம்பிக்கையில்லாப் பிரேரணையால் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைச் சமாளிப்பதற்காக சிங்கள தேசிய சக்திகளின் ஆதரவைப் பெறும் நோக்குடன் குமாரதுங்க ஆட்சி விரக்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக விடுதலைப்புலிகள் இந்த அறிக்கையில் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதான புலிப்படைகளின் தாக்குதல் திட்டத்தை செயலிழக்கச் செய்ய இத்தகைய விமான, பீரங்கி தாக்குதல்கள் அவசியம் என இலங்கை அரசு பொய்யான கூற்றுக்களைக் கூறி வருகின்றது.

அரசு பூதாகாரப் படுத்துவது போன்று உடனடித்தாக்குதல் திட்டம் எதுவும் எங்களிடம் இல்லை என்பதை வலியுறுத்திக் கூறுகின்றோம்.

புலனாய்வுத் தகவல்கள் தெரிவிப்பதாகக் குறிப்பிட்டு அரசு கூறும் விடயங்கள் நகைப்புக்கிடமானவை.

தனது அரசியல் எதிரணி கொண்டுவரும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முகம் கொடுக்க வேண்டிய சந்திரிகா குமாரதுங்க அரசு, தற்போதைய சிக்கலில் இருந்து விடுபடுவதற்காக - சிங்கள ஆதிக்க சக்திகளின் உணர்ச்சிபூர்வமான ஆதரவைத் திரட்டும் நோக்குடன் - இராணுவ சாகஸங்களையும் பொய்யான எச்சரிக்கைகளையும் நாடுகின்றது.

வேதனை தரும் யுத்தத் தாக்கங்களின் சுமையினால் தெற்கு மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள மனக் கசப்பு மற்றும் சீற்றம் ஆகியவற்றுக்கு முகம்கொடுக்க வேண்டிய குமாரதுங்க ஆட்சி, தேசிய சிறுபான்மையினர் அதிகாரத்தைத் தக்க வைப்பதற்கு எதிராக சிங்கள தேசாபிமானிகளை தூண்டி விடுவதற்கு பொய்யான பிரசாரங்களை நாடுகின்றது. இது ஓர் ஆபத்தான போக்கு.

நாடு எதிர்கொள்ளும் எந்தவோர் பிரச்சினையையும் தீர்ப்பதில் தோல்விகண்டுள்ள இந்த அரசு, ஆக்கபூர்வமற்ற - கொள்கையற்ற- தன்மையையே பிரதிபலிக்கின்றது - என்று புலிகளின் அறிக்கை கூறுகின்றது.

நோர்வேயின் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கச் செய்யும் நோக்குடன் நீண்ட யுத்த நிறுத்தம் ஒன்றையும் தெற்கில் வன்செயல் தாக்குதலகளையும் இடைநிறுத்துவது உட்பட பிரச்சினைகளை தணிப்பதற்கான ஒவ்வொரு நடவடிக்கைகளையும் விடுதலைப் புலிகள் எடுத்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இப்போதும் கூட சமாதான மற்றும் இன இணக்கப்பாட்டுக்கான பாதையை ஸ்ரீலங்கா அரசு நாடுவதற்கு, சர்வதேச சமூகம் அதற்கு அழுத்தம் கொடுக்கும் என்ற எதிர்பார்ப்புடன் புலிகள் பிரகடனப்படுத்தப்படாத சமாதான நிலையைப் பேணி வருகின்றனர்.

சமாதான முயற்சிகளைத் தேக்கமடையச் செய்யும் வகையில் ஸ்ரீலங்கா பின்பற்றிய கொள்கைகளும் உத்திகளும் எமக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளன.

மதிப்புக்குரிய சமாதானத் தூதுவர் நடு நிலைமையை நோக்கமாகக் கொண்டிருந்தார் என்பதற்காக அவரது தூரத்தைக் குறைக்கும் விதத்தில் நோர்வேயின் ஏற்பாட்டு நடவடிக்கைகளில் புத்திசாதுரிய மற்ற முறையில் தலையிட்டமை சமாதான முயற்சிக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது.

புலிகளின் படைகள் மீது தற்போது நடத்தப்படும் ஆத்திரமூட்டும் வான் தாக்குதல்கள் சமாதான முயற்சிகளை சேதப்படுத்தி விடும் - என்று புலிகளின் அறிக்கை கூறு கின்றது.

'தமிழர் தாயகத்தில் யுத்த நிலைமையை மோசமடையச் செய்யும் வகையில் மேற்கொள்ளப்படும் தவறான உத்திகளினால் ஏற்படக் கூடிய மோசமான விளைவுகளுக்கு முழுப் பொறுப்பேற்க வேண்டியிருக்கும் என்பதை ஸ்ரீலங்கா அரசு உணர வேண்டும் - என்று புலிகள் தமது அறிக்கையின் இறுதியில் எச்சரித்துள்ளனர். (உ-ஒ-3)


எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்

★ லவ் சேனல்

★ தா உயிரை தா (8699)

விஷ்ணு வீடியோ

கே.கே.எஸ். வீதி, கோண்டாவில்.


## நாகர்கோயில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் எதிர்த்தாக்குதல் நடத்தியதில் விடுதலைப் புலிகள் பின்வாங்கியதாகவும் -

இந்த மோதலில் சிப்பாய் ஒருவர் காயமடைந்ததாகவும் -

விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது. (உ-ஒ)

## குடாக்கடல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யைச் சேர்ந்த பிரான்சிஸ் சேவியர் அன்ரனிப்பிள்ளை (வயது 22) என்பவர் அந்த இடத்திலேயே பலியானார்.

இச்சம்பவத்தில் குருநர் பீச் றோட்டைச் சேர்ந்த சகோதரர்களான ஜேக்கப் ஆனந்தராசா(வயது 23), ஜேக்கப் கீதபொன்கலன்(வயது29) மற்றும் அன்ரன் சுமன்(வயது20) ஆகியோர் காயமடைந்துள்ளனர். பலியானவரின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் காயமடைந்த மூவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.(உ-5-6-9-10-51)

## சிறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மறியலில் இருக்கும் ரி.ஆர்.பாலுவுக்கு எதிரான விளக்கமறியல் உத்தரவு 10 ஆம் திகதி வரையிலும் -

நடைமுறையிலிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் சென்னை சைதாப்பேட்டையில் உள்ள 18 ஆவது மாநகர மாஜிஸ்திரேட் முன்னிலையில் இந்த இருவர் தொடர்பாகவும் மனு ஒன்றை மாநிலப் பொலீஸார் நேற்று சமர்ப்பித்தனர்.

இநத இருவருக்கும் எதிரான குற்றச்சாட்டுககள், பூர்வாங்க விசாரணைகள் முடிவடைந்துவிட்டதால் அவர்களைக் காவலில் வைக்கத் தேவையில்லை என்று பொலீஸ் தரப்பு அந்த மனுவில் தெரிவித்திருந்ததை அடுத்து விடுவிப்பு உத்தரவை நீதிவான் விடுத்தார்.

ஆனால் தங்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் விலக்கப்படவில்லை; வழக்கு வாபஸ் பெறப்படவில்லை என்பதால் அவை விலக்கப்படும் வரை நாங்கள் விடுவிப்பை ஏற்கத்தயாரில்லை என்று இருவரும் கூறிவிட்டதாக அவர்களது சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

தேவைப்படும் சமயத்தில் விசாரணைக்கு ஆஜராவேன் என்ற நிபந்தனைப் பத்திரத்தில் ஒப்பமிட்ட பின்னர், சிறையிலிருந்து வெளியேறுமாறும் வேலூர்ச் சிறையில் உள்ள மத்திய அமைச்சர் ரி.ஆர்.பாலு கேட்கப்பட்டதாகவும் -

அதற்கு அவர் மறுத்துவிட்டதாகவும் - மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## ஆளும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் நேற்றுப் பிரதமர் வாஜ்பாய் தலைமையில் கூடி ஆராய்ந்தனர்.

தமிழகத்தில் சட்டத்தின் ஆட்சியை மீள நிலை நிறுத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் மத்திய அரசு எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் வற்புறுத்தினர்.

ஆனால் -

தமிழகத்தில் மாநில ஆட்சி கலைக்கப்படுவதற்கு அகில இந்திய காங்கிரஸ் ஆதரவளிக்காது என்றும் -

அங்கு அரசமைப்பு ஏற்பாடுகள் சீர்குலைந்து போய்விடவில்லை என்றும் -

மாநில மத்திய அமைச்சர்கள் எவ்வாறு ஒழுங்கு முறையாகச் செயற்பட வேண்டும் என்பதை தெரியப்படுத்துவதற்காக நடைமுறை ஒன்றே உருவாக்கப்படவேண்டும் என்றும் -

காங்கிரஸ் பேச்சாளர் ஜெய்பால் ரெட்டி கூறினார்.

இதற்கிடையில், நேற்று குடியரசுத் தலைவர் கே.ஆர்.நாராயணனைச் சந்தித்த தமிழக சட்ட அமைச்சர் கே.பொன்னையன் தலைமையிலான-குழுவினர், கருணாநிதி கைது செய்யப்பட்டதில் எவ்வித தவறும் நிகழவில்லை என்று கூறி, தமிழக அரசைக் கலைக்கக் கூடாதென்று ஜனாதிபதியிடம் வற்புறுத்தினர். தமது வேண்டுகோளுக்கு வலுச் சேர்ப்பதற்காக, கருணாநிதி கைது செய்யப்பட்ட சமயம் தமிழகப் பொலீஸார் படம் பிடித்த ஒளி நாடா உட்பட சில ஆவணங்களை தமிழக அரசின் பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் கையளித்தனர். (உ-ஒ)

## இளைஞரின் சடலம்

வவுனியா, தெற்கு இலுப்பங்குளப் பகுதியில் அழகேசு என்ற 28 வயது இளைஞரின் சடலம் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் நேற்று இரவு கண்டுபிடிக்கப்பட்டது.

முன்னதாக நேற்றிரவு 8மணியளவில் தெற்கு இலுப்பங்குளப் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான நபர் ஒருவர் நடமாடுவதாகக் கிடைத்த தகவலையடுத்து அங்கு சென்று பார்த்தபோது சடலம் மீட்கப்பட்டதாக 'புளொட்' அமைப்பினர் தெரிவித்தனர். (உ-ஒ)

## மத்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்தோடு -

தமிழக மாநிலம் தொடர்பாக மத்திய அமைச்சரவை முக்கிய முடிவு எதையாவது எடுத்து அறிவித்தால், அதைச் செயற்படுத்துவதற்கு - நடைமுறைப்படுத்துவதற்கு- மாநில அரசின் தலைவரான மாநில ஆளுநர் தயாராக இருக்கவேண்டும்.

ஆனால் தமிழகத்தில் பழைய ஆளுநர் பாத்திமா பீவி பதவி நீக்கம் செய்யப்பட்டு விட்டார்; அல்லது பதவி விலகிவிட்டார்.

புதிய பதில் ஆளுநர் ஸ்ரீரங்கராஜன் இன்று முற்பகல் 11 மணிக்குத்தான் பதவி ஏற்கின்றார்.

எனவே அவர் பதவியேற்ற பின்னர் நடவடிக்கை எதுவும் எடுக்கக் கூடிய தயார் நிலையில் ஆளுநர் இருக்கும் போது மத்திய அமைச்சரவை இன்று நண்பகலுக்குப் பின்னர் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பிணையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மனுவில் கூறப்பட்ட விடயங்களை கலைஞரின் சட்டத்தரணிகள் இன்று நீதிமன்றத்தில் வலியுறுத்தி வாதாடமாட்டார்கள் என்றும் -

கருணாநிதி சார்பில் இப்போதைக்கு புதிய பிணை மனு எதுவும் தாக்கல் செய்யப்படமாட்டாது என்றும் -

மேலும் தெரிவிக்கப்பட்டது.

தமக்கு எதிராகத் தீவிரப் போக்கைக் கடைப்பிடிக்கக் கூடிய நிலையில் மாநில அரசு தொடர்ந்திருக்க அனுமதிக்கப்படமாட்டாது என்பது ஓரளவு உறுதியாகத் தமக்குத் தெரிந்த காரணத்தினாலேயே கருணாநிதி பிணை கோராமல் சிறையில் இருந்தபடியே வழக்குகளையும் சந்திக்கப் போவதான 'ஸ்டண்ட்' நிலைப்பாட்டை எடுத்திருக்கலாம் என்று கருதப்பட்டது. (உ)


# லிங்கம் சில்க் ஹவுஸின்

## மாபெரும் ஆடி மாத சிறப்புத் தள்ளுபடி

ஆடிமாதம் 2ஆம் திகதி முதல் மாபெரும் சிறப்புத் தள்ளுபடியில் விற்பனை நடைபெறுகின்றது. விரையுங்கள்! முந்துங்கள்!!

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பனாறில் | ~~4500~~ | 3900 | பிளேன் சாறி | ~~400~~ | 300 |
| காஞ்சிபுரம் (பியோர்) | ~~3750~~ | 3000 | சேட்வகைகள் (Box) | ~~700~~ | 500 |
| காஞ்சிபுரம் (பியோர்) | ~~2000~~ | 1500 | சேட்வகைகள் (Box) | ~~550~~ | 400 |
| மைசூர் சில்க் | ~~2250~~ | 1750 | Tசேட் வகைகள் | ~~450~~ | 300 |
| றிச்கொட்டின் சாறி | ~~2150~~ | 1800 | பேபிசூட் வகைகள் | ~~425~~ | 300 |
| றிச்கொட்டின் சாறி | ~~1800~~ | 1400 | பேபிசூட் வகைகள் | ~~300~~ | 200 |
| றிச்கொட்டின் சாறி | ~~1400~~ | 1000 | சற்றின் பிளேன் | ~~140~~ | 100 |
| பிரியங்கா கொட்டின் சாறி | ~~1100~~ | 850 | சில்க் பொலியஸ்ரர் | ~~70~~ | 50 |
| நோமல் சாறி (with Blows) | ~~900~~ | 600 | பலஸ் | ~~180~~ | 90 |
| நோமல் சாறி | ~~600~~ | 400 | சொட்ஸ் சில்க்ஸ் | ~~150~~ | 100 |
| நோமல் சாறி | ~~450~~ | 200 | சலஞ்சர் (44") | ~~90~~ | 60 |
| பஞ்சாபி வகைகள் | ~~1600~~ | 1200 | சலஞ்சர் (36") | ~~80~~ | 50 |
| பஞ்சாபி வகைகள் | ~~1300~~ | 800 | றங்குலர் (கறுப்புவெள்ளை) | ~~90~~ | 50 |
| பிளேன் சாறி | ~~425~~ | 350 | | | |

ஏனையவற்றிற்கு 20% தள்ளுபடியில் பெற்றுக்கொள்ளலாம். 18, நவீனசந்தை, யாழ்ப்பாணம். (C/17282)



# அதி நவீன கணனிகள் மலிவு விலையில்

உங்கள் வீட்டில் கணனியா?

அலுவலகங்களில் கணனியா?

இன்றே எமது காட்சியறையில் உங்கள் தெரிவுகளை தெரிவுசெய்து கொள்ளுங்கள்

**Pentium III 866 MHz, 933MHz, 1000 MHz Computers**

**Intel Pentium III 1000 MHz Processor**

Motherboard Gigabyte
40 GB Quantum Hard Disk Drive
128 MB SDRAM
15" SVGA Colour Monitor - View Sonic
8MB VGA Card
1.44MB Floppy Disk Drive
ATX Casing
Key Board (Win 98)
Mouse and Pad
Acer 52X CD Rom Drive
32 Bit 3D Sound Cards(Creative)
480 - Watts Speaker
Modem 56K (Motola)



Modem, Scanners, UPS 650VA, 1000VA, Floppy disks, Colour Cartridge, Printers LQ-300, HP Laser Jet 1100, Cannon BJ 1000, Cannon Laser Jet, Hard Disk, Video Card, Network Card, CDROM Drive

மற்றும் கணனி உதிரிப்பாகங்களுக்கு...... (C/17281)

**NEW LANKA TRADERS (PVT) LTD.**

No.222, Stanly Road. Jaffna. T.P : 2838 FAX : 2062


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.07.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.